தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உ00அ	மலர்
	பிங்கள. ஆனி ஆடி	
ருக	(1977 ஜூலை. ஆகஸ்ட், செப்டம்பர்)	ந & ச

திருக்குறள் உரையாசிரியர்கள் பொதுநோக்கு — தனிநோக்கு

செல்வி தி. சு. சத்தியம், எம். ஏ.,

ஆய்வுத் துணைவர்,

திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி, தமிழ்த்துறை,

சென்னைப் பல்கலைக் கழகம்.

(வைகாசி இதழ் தொடர்ச்சி)

குளத்தில் வாழும் தவளைகள் தாமரையின் எழிலையோ, மணத்தையோ, இனிக்குந் தேனையோ அனுபவிப்பதில்லை. ஆனால் எங்கிருந்தோ பறந்துவரும் வண்டு அத்தாமரையின் தாதளைந்து, ததும்பும் தேன் நுகர்ந்து, சிறகடித்துச் செல்லுகின்றது' என்னும், இயற்கைச் செல்வர் டாக்டர் மு. வ. அவர்களின் கூற்று, அவர்தம் இதயக்கூவலாக இதயக்கேவலாகத்தான் என்னுள் ஒலிக்கின்றது. இவை சங்ககாலக் கவிதைகள், இவை பல்லவர்கால பக்திப்பாடல்கள், இவை இடைக்காலக் காவியங்கள், இவை பிற்காலச் சிற்றிலக்கியங்கள் எனப் பழம்பொருட்காட்சிச்சாலையில் கொலு வீற்றிருக்கும் காட்சிப்பொருளாக நந்தமிழ் இலக்கியங்கள் இருப்பதால் பயன் யாது? இக்குறைக்குப் பெருங்காரணம் காலத்தின் மிக வேகமான வேறுபாடு. எனினும் நாம் முயன்றால் நமக்கும்-பழந்தமிழ் இலக்கியங்கட்கும் உள்ள இடைவெளி தடையீடு குறையலாகும் அன்றோ!

மின்விசைப் பொறியின் மூலம் மிக வேகமாக மேல்நிலைக்குச் (Upstairs) செல்வோர், மின்விசையில்லாதபோது பழங்காலப் படியேறித்தானே ஆகவேண்டும். படியேறத் தெரியாது எனக் கீழேயே இருத்தல் கூடுமோ? நாம் வாழ்க்கையில் தடுமாறி நிற்கையில்-தடம்மாறி நிற்கையில் நம்மோடு நடமாடும் துணையாக உடன்வரும் இலக்கியங்கள் என்றால் அவற்றால் நாம் பயன்பெற முடியாதா?

முடியவில்லையே. காரணம் இடையே தடுப்பது மொழிச்சிக்கல். இதனை நீக்க முடியாதா? முடியும் என்றனர்; முடிக்க முனைந்தனர்; முழு வெற்றியும் பெற்றனர் சிலர். அவர்கள்தான் உரையாசிரியர்கள். ஒரு தாய்மொழியினருக்குள்ளேயே தோன்றும் இம்மொழிச் சிக்கல் இன்று நேற்று முளைத்ததன்று. காலத்தின் ஒவ்வொரு மாற்றுப்படியிலும் தலைதூக்குவது இச்சிக்கல். அப்போதெல்லாம் கைகொடுத்து-உரை கொடுத்து உதவியவர்கள் உரையாசிரியர்களே.

கட்டுரையின் நோக்கம்

1. இக்கட்டுரையின் முற்பகுதியில் திருக்குறள் உரையாசிரியர்களை-உரைகளைப்பொதுநோக்கில்-பரந்த நோக்கில் காணல்.

2. கட்டுரையின் இரண்டாம்பகுதியில் திருக்குறள் உரையாசிரியர்களில் சிலரைத்தனி நோக்கில்-சிறப்புநோக்கில் கண்டு அவர்தம் உரைத்திறம் உணர்தல்.

உரையாசிரியர் உதவி

'இருட்டறையில் உள்ள எழில்மிக்க ஓவியத்தைக் காணக் கண்கள் மட்டும் இருந்தால் பயனில்லை-இருளைப் போக்கும் ஒளி வேண்டும். பழம்பொருட்காட்சிச்சாலையில் உள்ள பலவகையான கலைச்செல்வங்களைக் கண்டுகளிக்க அவற்றைப்பற்றிய விளக்கவுரை வேண்டும். இனிய பலாப்பழத்தைச் சுவைத்து மகிழ, அதனை முறையாக அறுத்து சுளை எடுத்துத் தருபவரின் உதவிவேண்டும். இவ்வாறே பழம்பெரும் இலக்கண இலக்கியச் செல்வங்களைக் கற்று மகிழ்வதற்குத் தக்க உரையாசிரியர்கள் வேண்டும். காட்டுவித்தால் அன்றி அவற்றைக் காண இயலாது' என உரையாசிரியர் புரியும் உதவியை ஏற்ற உவமைகள் காட்டி விளக்குகின்றார் திரு. மு. வை. அரவிந்தன் அவர்கள்.

'நூலாசிரியரின் அரிய கருத்துக்களை எல்லாம் உரையாளர் உதவியாலேயே உலகம் உணர்ந்து இன்புறுகின்றது. பேருபகாரிகளாகிய உரையாசிரியர்களின் உதவி இல்லையாயின் பண்டை உயிர் நூல்களாம் கருவூலங்களில் தொகுத்து வைத்த விலை வரம்பில்லாப் பொருள் மணிக்குவியல்களை யாம் எங்ஙனம் பெறுதல் கூடும்?' என்ற பண்டிதமணி மு. கதிரேசஞ்செட்டியார் வினவில் உரையாசிரியரின் பேருதவி உறவாடுவதை உணரலாம்.

டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர்கள் இடைக்காலத்தில் தொன்னூல்கள் பயிலப் பெற்றதற்குரிய காரணங்களை விளக்குகையில்,

'உரைவகை ஒரு முயற்சி, சார்பிலக்கண நூல்வகை ஒரு முயற்சி, இலக்கியவகை ஒரு முயற்சி. இம்மூவகை முயற்சியாலும் தொன்னூல்கள் இடைக்காலத்துப் பரவின; படிக்கப் பெற்றன'

என உரைவகை முயற்சிக்கு முதலிடங் கொடுப்பது அதன் பயன் பெருமைக்கு வலியூட்டவே எனலாம்.

வள்ளுவமும் வாழ்வியல் ஆய்வும்

தமிழையும் திருக்குறளையும் முற்றுச்சம இணைகள் (congruent) என்று கூறலாம். காலத்தால் மூத்து காலத்தை வென்று வாழ்வன; எம்மொழியினரையும் எந்நாட்டினரையும் ஈர்ப்பன; தனக்கென்ற தனிப்பண்பினை உடையன என ஒப்புமைகளை அடுக்கிக்கொண்டே செல்லலாம். இத்தன்மைய திருக்குறள் என்று தோன்றியதோ அன்றே அதையொட்டிய பல்வகை ஆராய்ச்சிகளும் தோன்றிவிட்டன எனலாம். வள்ளுவமே மிகப்பெரிய ஆராய்ச்சி நூல்தான் தெள்ளு தமிழில் தொல்காப்பியப் பொருளதிகாரம் வாழ்வியலை ஆய்ந்து விதி சமைத்தது என்றால், அதனினும் விரிந்த முறையில், ஆழ்ந்த முறையில் வாழ்வியலின் அனைத்துக் கூறுகளையும் ஆய்ந்து விதி சமைத்த விளங்கு பெருமை திருக்குறளுண்டு. ஒவ்வொரு கவிதையுமே-இலக்கியமுமே ஒருவகை-சிறுவகை வாழ்வியல் ஆராய்ச்சிதான். ஆனால் அவற்றின் ஆராய்ச்சிக்கும் வள்ளுவத்தின் ஆராய்ச்சிக்கும் எத்துணையோ வேறுபாடுண்டு. கடலடியில் எத்துணையோ கவின் முத்துக்கள் உறங்கிக்கிடக்க, காலடியில் அலையடித்து ஒதுக்கிய ஒரு சிப்பியின் அழகைக்கண்டு மகிழ்ந்து போற்றும் குழந்தை நிலைக்கு அவர்களை ஒப்பிடலாம். ஏனெனில், காலமெனும் அலைகள் தம்வாழ்வெனும் காலடியில் ஒதுக்கிய அனுபவமெனும் சிப்பிகளே அவர்தம் ஆய்விற்குட்படுவன. ஆனால் வள்ளுவரோ வாழ்வுக்கடலடியில் மூழ்கி அனைத்து முத்துக்களையும் - அருஞ்சொத்துக்களையும் வெளிக் கொணர்ந்து, ஒவ்வொன்றையும் தம் ஆய்வுக் கண்களால் அலசிப் பார்த்து, உரைத்துப் பார்த்து, நிறுத்துப்பார்த்து அதன் மதிப்பை அளவிட்டுரைத்ததோடு, அதனைப் பயன்படுத்தும் வழிமுறைகளையும் விதியாக்கினார். இவ்வண்ணம், பல்வகை ஆய்வுகளும் ஒருங்கே சமைந்த வள்ளுவ ஆய்வுக்கூடம், தோன்றிய காலத்தேயே மற்றவர்க்கு மலைப்பைத் தந்தது-காலமோ அம்மலைப்பைப் பெருமலையாக மாற்றிவிட்டது. ஆகையால், என்றும் வாழ்வின் ஆட்சிப் பொருளாக-மாட்சிப்பொருளாக இலங்கவேண்டும் என்ற பெருநோக்குடன் படைக்கப்பட்ட வள்ளுவம் வாழ்வின் காட்சிப்பொருளாக மாறிற்று. இம்மாற்றத்தை வரவேற்காது, இதற்கொரு மாற்றம் காண முனைந்தனர் உண்மைத்தமிழர்கள். வள்ளுவ ஆய்வுக்கூடத்தை அணுகிப்

பயன்பெறுவதற்குரிய வழிமுறைகளை ஆய்ந்துரைத்தனர் பல உரையாசிரியர்கள். திருக்குறளே ஆராய்ச்சியின் வளர்ச்சிதான்-வளர்ச்சியின் உச்சநிலைதான். அதனை அறிவதற்குப் பல ஆராய்ச்சிகள் மலர்ந்தன-வளர்ந்தன. அவற்றின் வளர்ச்சியை அளவிட்டு அறிவதற்கு இன்னொரு ஆராய்ச்சி அவசியமாகின்றது. இது, சுழற்சிக்குள் சுழற்சியாக-வளர்ச்சிக்குள் வளர்ச்சியாக வள்ளுவத்தின் அறிவலைகள் ஓயாமல் இயங்குகின்ற பேருண்மையை உணர்த்துவதாம்.

குறளுக்கு உரைபல தோன்றுவதன் காரணம்

தமிழ் மொழி இலக்கியங்களிலேயே மிகுதியான உரைகளைப் பெற்ற-பெறுகின்ற-பெறும் தனிச்சிறப்பு வள்ளுவத்திற்குண்டு. இப்படி உரைகள் பலவாகப் பெருக, திருக்குறள் பொருண்மையின் பெருமையும் அருமையும் ஒரு காரணம். இன்னும் சில காரணங்கள் உள என்று சிந்தனைத் திட்பம் சான்ற அறிஞர் சிலர் கூறுகின்றனர்.

> 'முன்னோர் எழுதிய உரைப்பொருளைப் பெரிதும் தழுவக் கூடாது; தாம் ஒரு தனியுரை எழுதத் துணிந்ததற்குச் சான்றாக எங்ஙனமேனும் பலகுறட்குப் புத்துரை சொல்ல வேண்டும் என்னும் முனைப்பே திருக்குறள் உரை பலவற்றின் தோற்றத்துக்குக் காரணம் என்று சுருங்கச் சொல்லலாம்' என்பது டாக்டர் வ. சுப மாணிக்கம் அவர்கள்

காட்டும் காரணமாகும்.

புலவர் இரா. சாரங்கபாணி அவர்கள், உரை வேற்றுமைகளை நன்கு ஆய்ந்து பின்வரும் காரணங்களைக் காட்டுகின்றார்.

> 'ஏடெழுதுவோர் பிழையால் புகுந்த பாட வேறுபாடுகளும் குறளைப் பிரிக்கும் முறைகளும் சொற்களைக் கொண்டு கூட்டும் நெறிகளும் காலத்தால் சொற்கள் எய்திய பொருள் வேறுபாடுகளும் சமுதாயத்தின் பழக்க வழக்க மாறுபாடுகளும் இயல்பாகவே உரை வேற்றுமைகட்கு இடங்கொடுத்துவிட்டன. புறநாகரீகச் சார்பும் சமயச்சார்பும் அரசியற் சார்பும் முன்னிற்க வலிந்து வேறுபட்ட உரைகளை எழுதினோரும் உளர்'

இத்தன்மைய பல காரணங்களால் பல்லுரைகள் குறளுக்குத் தோன்றின. அவற்றில் குறையுரைகளும் உண்டு; நிறையுரைகளும் உண்டு. அவற்றின் இயல்பிற்கேற்ப வாழும் எல்லையைக் காலம் வரையறுக்கும்.

திருக்குறள் உரைவகை
செய்யுள் வடிவில் உரைநூல்கள்

இங்கு 'உரை' என்ற சொல் உரைநடையினைக் குறித்ததன்று; 'விளக்கம் கூறல்' (Explaination) 'மதிப்பீடு' (Commentary) என்ற பொருளில் ஆளப்படுவதாகும். உரைநடையில் இயன்ற நூலுக்கு உரைநடையிலேயே விளக்கம் கூறும் நூல்கள் தோன்றும் காலத்தில் வாழும் நமக்கு, செய்யுள் வடிவ நூலுக்குச் செய்யுள் வடிவிலேயே உரை விளக்கங்கள் எழுந்தன என்பது மலைப்பைத் தரலாம். ஆயின் உண்மையன்றோ;

> 'இரங்கேச வெண்பா, சிவ சிவ வெண்பா, தினகர வெண்பா, வடமலை வெண்பா சோமேசர் முதுமொழி வெண்பா முதலியன திருக்குறளுக்கு உதாரணங்கூறும் நூல்கள். உரைவகைகளிலே உதாரணங் கூறுதலும் ஒன்று ஆதலின் முற்கூறிய நூல்கள் திருக்குறளின் உரை நூல்கள் என்றே கூறல் தகும்'

என டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள், திருக்குறளுக்குச் செய்யுள் வடிவில் அமைந்த உரைநூல்களைக் காரணத்துடன் சுட்டுகின்றார்.

இம்முறையில் குறள்விளக்க வெண்பா நூல்களாக 21 நூல்கள் அமைந்துள்ளன. இவையேயன்றி, பழைய விருத்தநூல் ஒன்றும், அண்மையில் தோன்றிய திருக்குறள் அகவல், குட்டிக்குறள், திருக்குறள் இசைமாலை போன்றவையும் திருக்குறளுக்குச் செய்யுள் வடிவில் தோன்றிய உரைநூல்களேயாம்.

செய்யுள் வடிவில் உரைவிளக்கங்கள்

பழந்தமிழ்ப் புலவர் பலர் திருக்குறளுக்கு உரையெழுத வேண்டும் என்ற நோக்கமின்றி, தம் இலக்கிய விளக்கத்திற்காகச் சில குறள்களை மேற்கொண்டு, அவற்றிற்கு நல்விளக்கங்கள் தந்துள்ளனர். இளங்கோ அடிகள், சீத்தலைச்சாத்தனார், சேக்கிழார், கம்பர் போன்ற தமிழ்ப்புலவர்கள் தந்த குறள் விளக்கங்களைச் செய்யுள் வடிவிலமைந்த உரை விளக்கங்கள் எனக் கொள்ளலாம்.

பிறநூல் உரையிடை குறளுரை

நூலாசிரியர்களைப் போலவே உரையாசிரியர்களும் தம் விளக்கத்திற்குக் குறளை மேற்கோளாகக் கொள்கையில் அவற்றிற்கு விளக்கம் தருகின்றனர். திருக்குறள் உரை நூல்களில் காணாத புதிய கருத்துகளும், நயங்களும் அவ்விளக்கங்களில் செறிந்திருக்கின்றன. அவற்றைத் தனியே தொகுத்து, 'பிறநூல் உரையிடைக் குறளுரை' என்ற தலைப்பில் வெளியிடின் பயன் மிகும்.

திருவள்ளுவ மாலையில் திருக்குறளுரை

திருவள்ளுவமாலையில், திருக்குறட் பொருட்சுவையில் தமையிழந்து பாடிய புலவர்களின் புகழ்ப்பாடல்கள் பலவுள. திருக்குறளின்

வடிவமைப்பை-கட்டுக்கோப்பை ஆய்வுக்கண் கொண்டு அளந்தறிந்த புலவர்களின் பாடல்களும் உள. பின்முறைப் பாடல்களை ஒருவகைக் குறளுரை எனலாம்.

> 'திருக்குறளின் பால்தோறும் உள்ள இயல்களை ஆராய்ந்து உரைப்பது உரையாசிரியரின் பணியாதலின், திருவள்ளுவ மாலையில் இயல் ஆராய்சியில் ஈடுபட்டுப் பாடல்கள் இயற்றியவர்களும் உரையாசிரியர்களாக மதிக்கத் தகுந்தவர்கள் என்னலாம்'

என்று திரு. மு. வை. அரவிந்தன் அவர்கள் கருத்து இங்கு நோக்கத்தக்கது.

திருக்குறளின் இயல், அதிகார ஆய்வில் ஈடுபட்டுப் பாடல் இயற்றிய - திருவள்ளுவ மாலையில் இடம்பெற்ற புலவர் பெயர்கள், பாடல் எண், ஆய்வு முடிவு ஆகியவை கீழே பட்டியலாக்கப் பட்டுள்ளன.

தொடர் எண்.	புலவர் பெயர்	பாடல் எண்	ஆய்வு முடிவு
1	சிறுமேதாவியார்	20	பாயிரவியல்-4 அதிகாரங்கள் அறத்துப்பால்-33 ,, ஊழியல்-1 ,, இன்பத்துப்பால்-25 ,,
2	தொடித்தலை விழுத்தண்டினர்	22	அறத்துப்பால்-4 இயல்கள் பொருட்பால்-7 இயல்கள் காமத்துப்பால்-3 இயல்கள்
3	எறிச்சலூர் மலாடனர்	25	பாயிரவியல்-4 அதிகாரங்கள் இல்லறவியல்-20 ,, துறவறவியல்-13 ,, ஊழியல்-1 அதிகாரம்
4	போக்கியார்	26	அரசியல்-25 அதிகாரங்கள் அமைச்சியல்-10 ,, அரணியல்-2 ,, கூழியல்-1 அதிகாரம் படையியல்-12 அதிகாரங்கள் நட்பியல்-17 ,, குடியியல்-13 ,,
5	மோசிகீரனர்	27	ஆண்பால் பற்றியவை 7 அதிகாரங்கள் பெண்பால் பற்றியவை 12 அதிகாரங்கள் இருபால் பற்றியவை 6 (இப்பத்தொன்பதுள் இறுதி ஆறு)
6	மதுரைப் பெருமகனர்	37	அறத்துப்பால்-38 அதிகாரங்கள் பொருட்பால்-70 ,, இன்பத்துப்பால்-25 ,,

5. திருக்குறள் உரை—கால நோக்கில் தொகை.

எண்.	உரை முறை	கால முறை					மொத்தத் தொகை
		பரிமேலழகருக்கு முன்	பரிமேலழகர் காலம் (கி.பி, 13-ஆம்நூ.ஆ.)	கி, பி. 18-ஆம் நூ.	கி, பி. 19-ஆம் நூ,	கி, பி, 20-ஆம் நூற்றுண்டு	
1	பரிமேலழகர்க்கு முற்பட்ட உரை (தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதி, திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காலிங்கர்)	9					9
2	பரிமேலழகர் உரை		1				1
3	பழைய உரை (பரிமேலழகருக்குப் பிற்பட்டவை)			2			2
4	பரிமேலழகர் உரையின் தழுவல்				9	3	12
5	திருக்குறள் தொகுப்புரை					13	13
6	திருக்குறள் புத்துரை						
	அ. அறத்துப்பால்					11	11
	ஆ. பொருட்பால்					3	3
	இ. காமத்துப்பால்					3	3
	ஈ. முப்பால்				5	48	53
		9	1	2	14	81	107

திருக்குறள் உரையாசிரியர்கள்-தனி நோக்கு (இறைவாழ்த்தின்-உரைத்திறம்)
தனிநோக்கின் பொருள்

தனிநோக்கு-சிறப்புநோக்கு-ஆழ்ந்த நோக்கு-ஆய்வுநோக்கு

தனிநோக்கின் எல்லை :
ஆசிரியர் எல்லை :

திருக்குறளுக்கமைந்த பழைய உரைகளில் பரிதியார் பரிமேலழகர் ஆகியோரின் உரைகளும், தற்கால உரைகளில் புலவர் குழந்தை, கா. அப்பாத்துரை ஆகியோரின் உரைகளும் தனிநோக்கின் எல்லைக்குட்படுவன.

அதிகார எல்லை :

திருக்குறள் பாயிரவியலுக்குப் பாயிரமாக முன்னிற்கும் 'இறை வாழ்த்து' அதிசாரத்திற்கு மேற்கண்டோர் தந்த உரைவிளக்கங்கள் மட்டுமே தனிநோக்கிற்குட்படுவன.

பரிதியார்-உரை :

பரிமேலழகர்க்கு முற்பட்டவர் பரிதியார். மிகமிக எளிய நடையில்-பேச்சு நடையில் சுருக்கமாகக் குறளுக்கு உரை தத்துள்ளார் இவர். சிலவிடங்களில் குறளொடு பொருந்தாமற் போகின்றன இவர்தரும் விளக்கங்கள்.

> '' குறளுக்கும் (பரிதியார்) உரைக்கும் ஒற்றுமைப்படுத்தி, கருத்து அறிந்து கொள்ளுதல் ஒரு கயிற்றிலாகிய பாலத்தின் காவிரியைக் கடக்க நினைத்தலை ஒக்கும் ''

என, மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் கூறியுள்ளமை இவண் நினைத்தற்குரியது. பால், இயல், அதிகார விளக்கங்கள் இவர் உரையில் அமையவில்லை. இது, இவரின் உரை தொடக்ககால முயற்சியோ என எண்ணத் தூண்டுகின்றது.

எளிமையும் சுருக்கமும் :

இவர் உரையின் சிறந்த பண்பிது. பின்வரும் பகுதிகள் இதற்குச் சான்றும்.

எ. கா. '' விருப்பு வெறுப்பு இல்லாதவன் பாதம் சேர்ந்தார்க்குத் துன்பம் இல்லை என்றவாறு''

''மும்மல வித்தாகிய பாவமானது சிவகீர்த்தி (4 ஆம் குறளுரை)
பாராட்டுவானிடத்து இல்லை என்றவாறு'' (5 ஆம் குறளுரை)

வழக்குச் (பேச்சு) சொல்-நடை.

எ. கா. 1 மனசிலே பற்றவைத்தார்-(3ஆம் குறளுரை)
2 பக்த சனங்களிட்ட புஷ்பத்தின்மேல் ,,
3 சகல பாக்கியமும் அநுபவிப்பார் ,,
4 மனசைப் போக்காமல் (6ஆம் குறை)
5 தெரிசனம் (9-ஆம்குறளுரை)

இவ்வண்ணம் பெரும்பாலும் பேச்சு வழக்குச் சொற்கள் பயின்ற பேச்சு நடையிலேயே இவர் உரை இயலுகின்றது.

வடசொல்லாட்சி

இவர் மிகுதியான வடசொற்களைத் தம் உரையிடைப் பெய்துள்ளார். இது இவர் காலத்தின் ஆற்றலோ!

எ. கா. 1 சாத்திரங் கற்றும் - (2 ஆம் குறளுரை)
2 ஸ்ரீபாதத்தை (2, 3, 7 ஆம் குறள் உரைகள்)
3 பக்த சனங்களிட்ட - (3 ஆம் குறளுரை)
4 சகல பாக்கியமும் அநுபவிப்பார் ('')
5 பாதம் - (4 ஆம் குறளுரை)
6 சிவகீர்த்தி - (5 ஆம் குறளுரை)
7 சத்த, பரிசு, ரூப, ரச, கந்தம் என்கிற பொறியை - (6 ஆம் குறளுரை)
8 இகபரம் - (6 ஆம் குறளுரை)
9 தன்மமெனுஞ் சமுத்திரமாகவுள்ள (8 ஆம் குறளுரை)
10 பரமேசுவரன் பாதம் - (8 ஆம் குறளுரை)
11 நவக்கிரகங்களும் (9 ஆம் குறளுரை)
12 அனந்தஞானம், அனந்த வீரியம், அனந்த குணம், அனந்த தெரிசனம், நாமமின்மை கோத்திரமின்றை - (9 ஆம் குறளுரை)
13 பிறவியாகிய சமுத்திரத்தை (10 ஆம் குறளுரை)

தனித்தமிழ் நடை

முதற்குறளுக்கு இவர் தரும் உரை மட்டுமே பேச்சுச் சொற்கள் வடசொற்கள் கலவாத தூய தமிழ் நடையில் அமைந்துள்ளது.

'' உயிரெழுத்துப் பன்னிரண்டுக்கும் அகரம் முதலெழுத் தாதன் முறைமைபோல ஆதியான பகவன் முதலாம் உலகத்துக்கு என்றவாறு ''

இவ்வுரையில், ' முறைமை போல ' என்ற சொற்ருெடர் பல்பொருட் செறிவுடன் இலங்கக் காணலாம்.

'' எட்டுக் குணங்களுடைய சிவன் சிவந்த தாளை வணங்காத தலை சித்திரத்தில் எழுதிய மரப்பாவைக்கு நிகராம் என்றவாறு (9 ஆம் குறளுரை)

ஒன்பதாம் குறளுரையின் ஒரு பகுதியாக, இவ்வுவமை சான்ற அழகிய நடை அமைந்துள்ளது.

தனி விளக்கம் - தன் விளக்கம்

இவர் பலவிடங்களில் குறளில் இல்லாத கருத்தை (குறளில் சொல்லாத இல்லாத) தன் கருத்தை ஏற்றி உரைக்கின்ருர். இவர்தம் ஆழ்ந்த சமயப்பற்றின் விளைவிது.

எ. கா. 1 வாலறிவன் நற்ருள் - மேல் அறிவாளனுன சிவன் ஸ்ரீபாதத்தை (2 ஆம் குறளுரை)

2 மலர்மிசை ஏகினுன் மாணடி - பக்த சனங்களிட்ட புஷ்பத்தின்மேல் எழுந்தருளியிருக்கும் சிவன் ஸ்ரீபாதத்தை (3 ஆம் குறளுரை)

3 இறைவன் பொருள்சேர்புகழ் - சிவகீர்த்தி (5 ஆம் குறளுரை)

4 அறவாழி அந்தணன் - தன்மமெனுஞ் சமுத்திரமாகவுள்ள பரமேசுவரன் (8 ஆம் குறளுரை)

5 என்குணத்தான் தாளை - சிவன் சிவந்ததாளை (9 ஆம் குறளுரை)

6 பிறவிப் பெருங்கடல் நீந்துவர் - பிறவியாகிய சமுத்திரத்தை நீந்துவர் சிவனடி சேர்ந்தார் (10 ஆம் குறளுரை)

7 கோளாகிய நவக்கிரகங்களும் புலனுகிய ஐம்புலன்களும் உண்டாகியும் பயனில்லை எட்டுக் குணங்களை

> யுடைய சிவன் சிவந்ததாளை வணங்காத தலை சித்திரத்தில் எழுதிய மரப்பாவைக்கு நிகராம் என்றவாறு (9 ஆம் குறளுரை)

இப்படியெல்லாம் தன் சமயக் கருத்தை இவர் வள்ளுவச் சமயத்தில் கலந்தாலும், அது நீரில் கலந்த எண்ணெய் போல் தனித்தே நிற்கிறது.

பரிமேலழகர் உரை

தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதியார், திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காலிங்கர் ஆகிய ஒன்பது உரையாசிரியர்கட்கும் (திருக்குறள்) காலத்தால் பிற்பட்டவர் பரிமேழகர். இது, இவர் உரைக்குப் பெருமை சேர்க்க, காலம் தந்த ஓர் அரிய வாய்ப்பாகும். தனக்கு முற்பட்ட உரையாசிரியர்களின் குறை நிறைகளை நன்குணர்ந்து, நிறைகளை மட்டும் கொண்டு, தன் தனித்திறனையும் நுண்மான் நுழைபுலனையும் நன்கிணைத்து மிகச் சிறந்த உரையினை இயற்றி, உலகில் மட்டுமன்றி இலக்கிய உலகிலும் ஈடிலாச் சிறப்புப் பெற்று விளங்குபவர் பரிமேலழகர்.

உரைமுறை :

1. அதிகார விளக்கம், 2. சொற்றொடர் உரை, 3. விளக்கவுரை, 4. கருத்துரை என நான்கியல்களாக இவர் உரைமுறையை வகுக்கலாம்.

அதிகார விளக்கம் :

'' அஃதாவது, கவிதான் வழிபடுங் கடவுளையாதல் எடுத்துக் கொண்ட பொருட்கு ஏற்புடைக் கடவுளையாதல் வாழ்த்துதல். அவற்றுள் இவ்வாழ்த்து ஏற்புடைக் கடவுளை என அறிக. என்னை? சத்துவ முதலிய குணங்களான் மூன்றாகிய உறுதிப்பொருட்கு அவற்றான் மூவராய முதற் கடவுளரோடு இயைபுண்டாகலான்- அம்மூன்று பொருளையுங் கூறலுற்றார்க்கு அம்மூவரையும் வாழ்த்துதல் முறைமையாகலின், இவ்வாழ்த்து அம்மூவர்க்கும் பொதுப்படக் கூறினாரென உணர்க '' என்பது பரிமேலழகர் ' கடவுள் வாழ்த்து ' என்ற அதிகாரத் தலைப்பிற்குத் தரும் விளக்கமாகும். திட்ப, நுட்பம் செறிந்ததாய், காரண காரிய முறை விளக்கமாய் இவ்விளக்கம் அமைந்துள்ளது. அதிகார இயைபினை இப்பகுதியில் விளக்குவதும் இவர் முறையாம் - நிறையாம்.

சொற்றொடர் உரை :

> '' எழுத்தெல்லாம் அகரம்முதல - எழுத்துக்கள் எல்லாம் அகரமாகிய முதலையுடையன; உலகு ஆதிபகவன் முதற்று— (அதுபோல) உலகம் அதிபகவனாகிய முதலையுடைத்து (முதற் குறளுரை)

இவ்வண்ணம் குறளைச் சொற்றொடர் முறையில் நிறுத்தி, பின் பொருள் உரைத்தல் இவர் கையாளும் முறையாம்.

விளக்கவுரை

அ. அணி விளக்கம் :

குறளில் எவ்வணிவரினும் அவ்வணியைத் திறம்பட விளக்கல் இவர் திறமாகும்.

> '' இது தலைமை பற்றி வந்த எடுத்துக்காட்டு உவமை. அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி நாத மாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலானும், ஆதி பகவற்குத் தலைமை செயற்கையுணர்வானன்றி இயற்கையுணர்வான் முற்றும் உணர்தலானுங் கொள்க '' (முதற் குறளுரை)

உவமை என்னும் ஒளி வெள்ளம் பாயும் பகுதிகளையெல்லாம் நமக்குக்காட்டி வள்ளுவச் சுடரின் பெருமையைப் புலப்படுத்துகின்ற இவர் உரைத்திறம் போற்றற்குரியது.

ஆ மேற்கோள்

இவர், தன்கோள் விளக்கத் தகுந்தவழி மேற்கோள் உரைத்தலும் உண்டு.

'' அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின் கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேறலின், ' 'ஏகினான்' என இறந்த காலத்தாற் கூறினார். என்னை? வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும், ஓராங்கு வரூஉம் வினைச்சொற்கிளவி, இறந்தகாலத்துக் குறிப்பொடு கிளத்தல், விரைந்த பொருள் என்மனார் பலர் (தொல். சொல். 241) என்பது ஓத்தாகலின் ''

இ சிறப்பு விளக்கம்

நான்காம் குறளில் வரும் ' இடும்பை' என்ற சொல்லுக்குப் ' பிறவித்துன்பங்கள் ' என்று பொருள் உரைத்தனர், பின்,

பிறவித் துன்பங்களாவன : தன்னைப்பற்றி வருவனவும் பிறவுயிர்களைப்பற்றி வருவனவும் தெய்வத்தைப் பற்றி வருவனவும் என முவகையான் வருந்துன்பங்கள் '' எனச் சிறப்பு விளக்கம் தருகின்றார்.

வள்ளுவர் ' இப்படி உரைத்ததற்குக் காரணம் யாது ' என எண்ணிப் பார்த்து சிறப்புரை நல்கும் திறனையும் இவரிடங் காணலாம்.

எ. கா.

அறம் பொருள் இன்பமென உடனெண்ணப்பட்ட மூன்றனுள் அறத்தை முன்னர்ப் பிரித்தமையாள் ஏனைப் பொருளுமின்பமும் பிறவெனப்பட்டன. பலவேறுவகைப்பட்ட அறங்களெல்லாவற்றையும் தனக்கு வடிவாகவுடையவனாகலின் 'அறவாழி அந்தணன்' என்றார். அப்புணையைச் சேராதார் கரை காணாது அவற்றுள்ளே யழுந்துவாராகலின், 'நீந்தலரிது' என்றார் (8 ஆம் குறளுரை)

ஈ. இலக்கணக்குறிப்பு-விளக்கம்

ஏற்புழி சொல் இலக்கணங்கூறி வள்ளுவப் பொருள் இலக்கணத்தை விளக்குகின்றார்.

எ. கா.

1. 'ஏகாரம் தோற்றத்தின்கண் வந்தது' (முதற் குறளுரை)
2. 'எவன் என்னும் வினைப்பெயர் என்னென்றாய் ஈண்டு இன்மை குறித்து நின்றது. கொல் என்பது அசைநிலை' (2 ஆம் குறளுரை)
3. 'ஒழுக்கநெறி ஐந்தவித்தானாற் சொல்லப்பட்டமையின் ஆண்டை ஆறனுருபு செய்யுட்கிழமைக்கண் வந்தது, 'கபிலரது பாட்டு' என்பதுபோல (6 ஆம் குறளுரை)

உ, சொற்பொருள்

வள்ளுவச் சொற்களுக்கு நுண்பொருள் கூறுவார் சிலவிடங்களில்

சேர்தல் - இடைவிடாது நினைத்தல் (3 ஆம் குறளுரை)

புரிதல் - எப்பொழுதும் சொல்லுதல் (5 ஆம் குறளுரை)

ஊ. பிறர் உரை சுட்டல்

பிறர் உரைப்பொருளையும் சிலவிடங்களில் சுட்டுகின்றார். இதனால், இவரது பரந்தமனமும், விரிந்த பொருளைக் கற்போர் உணரவேண்டும் எனும் சிறந்த நோக்கும் புலனாகும்.

எ. கா.

'அறவாழி' என்பதனைத்தரும சக்கரமாக்கி, அதனுடைய அந்தணனென்றுரைப்பாரும் உளர். (8 ஆம் குறளுரை)

கருத்துரை

குறளின் உட்பொருள் 'இயைபை ஆழ்ந்துணர்ந்து தொகுத்துரைக்கும் பண்பு இவர் கருத்துரையின் தனிச்சிறப்பாம்.

குறள் 1 '' இப்பாட்டான் முதற் கடவுளது உண்மை கூறப்பட்டது ''

குறள் 2 '' ஆகம அறிவிற்குப்பயன் அவன் தாளைத் தொழுது பிறவியறுத்தல் என்பது இதனுற் கூறப்பட்டது. '

குறள் 3, 4, 5, 6.

' இவை நான்கு பாட்டாலும் இறைவனை நினைத்தலும் வாழ்த்தலும், அவர் நெறி நிற்றலும் செய்தார் வீடு பெறுவர் என்பது கூறப்பட்டது. '

குறள் 7, 8, 9

' இவை மூன்று பாட்டினும் இறைவனை நினைத்தலும், வாழ்த்தலும், வணங்கலும் செய்யா வழிப்படுங் குற்றங் கூறப்பட்டது.'

குறள் 10

' உலகியல்பை நினையாது இறைவனடியையே நினைப் பார்க்குப் பிறவியறுதலும், அவ்வாறின்றி மாறி நினைப்பார்க்கு அஃது அமையுமாகிய இரண்டும் இதனல் நியமிக்கப்பட்டன. '

பரிமேலழகரின் இக்கருத்துரை முறையால் குறளின் நிரல்முறை புலனுவதோடு, வள்ளுவப் பொருளின் அழகான ஆற்றெழுக்கும் விளங்கங்காணலாம்.

புலவர் குழந்தை - உரை

தற்காலத்தில் திருக்குறளுக்கு உரை கண்டவர்களுள் ஒருவர் இவர். பிற உறையாசிரியர்களினும் மிக வேறுபட்ட முறையில் வள்ளுவத்தை நோக்கி உரை செய்துள்ளார் இவர். இவர் வள்ளு வரையும், வள்ளுவத்தையும் நோக்கும் பார்வை, அறிவுப்பார்வை-பகுத்தறிவுப் பார்வையாம்.

உறை முறை

1. தலைப்பு விளக்கம், 2. சொற்றொடர் உரை, 3. சிறப்புரை 4. கருத்துரை. எனும் நான்கு பகுதியில் இவர் உரை நடக்கின்றது

தலைப்பு விளக்கம்

பால், இயல், அதிகாரத் தலைப்புகளை இவர் தெளிவுற விளக்குகின்றார் 'இறைவாழ்த்து' (அ) 'கடவுள் வாழ்த்து' எனும் அதிகாரப்பெயரை 'இறைநலம்' என மாற்றி—முற்றிலும் புதுமையான விளக்கம் தருகின்றார் பின்வருமாறு.

"இறைநலம்-இறையாகிய நலம், பண்புத்தொகை. இறை-முதன்மை. நலம்-குணம். **மக்கள் முதன்மையாகிய குணங்களை அடையவேண்டும் என்பதே இவ்வதிகாரத்தின் உட்கருத்தாகும்.** மக்களின் வாழ்க்கைப் பயனாகிய அறம் பொருளின்பங்கூறப் புகுந்தார் அம்முப்பாலையும் இனிது நுகர வேண்டின் உயரிய மக்கட் பண்புகளை அடையவேண்டும் என முதற்கண் அக்குணச் சிறப்புக் கூறுகின்றார். 'அன்பே கடவுள், அறிவே கடவுள், ஆற்றலே கடவுள், என்னும் கடவுட் கொள்கையும் இதனிற் புறம்பானதன்று. கடவுள்-மேலானது, மேன்மையானது, சிறந்தது.

ஓரதிகாரத்தில் வரும் சொல்லையோ சொற்றொடரையோ, அவ்வதிகாரப் பொருளையோ கொண்டே அவ்வதிகாரத்திற்குப் பெயரிடும் ஆசிரியர் கொள்கைப்படியே இவ்வதிகாரத்தின் பெயரும் அமையப்பெற்றதாகும். முப்பாலாகிய இந்நூலுட் கூறப்படும் உயர் குணங்களின் உருவகமே இவ்வதிகாரம் என்பதை மறுமுறையும் நினைவு கூர்க.'

அதிகாரப் பெயரை மாற்றினாலும் தாம் ஆசிரியர் கொள்கையோடு மாறுபடவில்லை என்று இவர் கூறினாலும், இவர்தம் பகுத்தறிவுநோக்கின் முழு ஆட்சியையும் இவ்விளக்கத்தில் காண்கின்றோம்.

சொற்றொடர் உரை :

குறளைச் சொற்றொடர் முறையில் நிறுத்தி, பொருள் விளக்கம் தருகின்றார்.

> "இறைவன் பொருள்சேர் 'புகழ் புரிந்தார்' மாட்டு — இறைவனது மெய்ப்பொருள் சேர்ந்த புகழினை விரும்பினவரிடத்து, இருள்சேர் இருவினையும் சேரா — அறிவின்மையால் உண்டாகும் பெரிய துன்பங்கள் சேரா". (5 ஆம் குறளுரை)

பரிமேலழகர் உரை கூறும் முறையோடு இம்முறை ஒத்துச் செல்கின்றது.

சிறப்புரை :

சொற்பொருள் விளக்கம் :

அ. நேர்பொருள் :

எ. கா. ஆதி—முதல்—முதற் குறளுரை.
வால் - உண்மை - இரண்டாம் குறளுரை.
மிசை—மேல்—மூன்றும் குறளுரை.
ஏகுதல்—எழுதல்—மூன்றும் குறளுரை.
நாற்றம்—மணம்—ஆறும் குறளுரை.
ஆழி—கடல்—ஏழாம் குறளுரை.
புணை—தெப்பம்—ஏழாம் குறளுரை.

ஆ. கருதிய பொருள் :

எ. கா. 1. ஆதி பகவு - முதன்மைப்பகுதி—குணங்களின் முதன்மைப் பகுதி (முதற் குறளுரை)

2. மிசை ஏகுதல்—மேலே எழுதல்—உயர்தல் மலர்மிசை ஏகினன்
உயர்ந்த அறிவன் (மூன்றும் குறளுரை)

3. கடத்தல் — வாழ்க்கையில் வறுமை முதலிய துன்பமின்றி வாழ்தல் (10ஆம் குறளுரை)

இ. கண்டபொருள் (வள்ளுவத் துணையால்) :

எ. கா. 1. அறம்—மனத்துக்கண் மாசிலனுதல் (குறள் : 34) (7ஆம் குறளுரை)

2. அந்தணன் - எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகுபவன் (குறள் : 30) (7ஆம் குறளுரை)

3. எண்மை—எளிமை (424, 558) குறள் கருத்தின்படி பணியுமாம் என்றும் பெருமை (978) எனக் காண்க. (9 ஆம் குறளுரை)

இலக்கணக் குறிப்பு நல்கல் :

எ. கா. கொல் - அசை (2ஆம் குறளுரை)
வினை — ஆகுபெயராய்த் துன்பத்தை உணர்த்துற்ற (5 ஆம் குறளுரை)
நீந்துவர்—வினையாலணையும் பெயர் (10 ஆம் குறளுரை)

உவமையால் விளக்கல் :

எ. கா. " தனக்குமேல் ஒருவன் இருந்தால் — தானே தான் அவனினும் தாழ்ந்தவன் என்னும் கவலை உண்டாகும்? வண்டியில் செல்வோருக்குத்தானே வானூர்தி இல்லை என்ற கவலை. வானூர்தியில் செல்வோருக்கு அதற்குமேல் செல்லும் ஊர்தி இன்மையால் கவலை உண்டாக இடமில்லை என்பதை அறிக " (7ஆம் குறளுரை)

இத்தன்மைய இவர்தம் அழகிய உவமைகளால் வள்ளுவக் கருத்து மேலும் அழகுறுவதோடு தெளிவுறவும் காணலாம்.

கருத்துரை :

குறள் : 1

" மக்கள் முதன்மையான குணமுடையராய் வாழவேண்டும் என்பது கருத்து "

குறள் : 2

" உண்மையறிவைப் பெறுவதே கல்வியின் பயனாகும் ".

குறள் : 3

" உயர்ந்த அறிவினை அடைந்தவர் உலகில் இன்புற்று நெடிது வாழ்வர் "

இதுபோன்று ஒவ்வொரு குறளுக்கும் கருத்துரை தருகின்றார்.

கா. அப்பாத்துரை - உரை

வள்ளுவத்திற்கு மிகப்பெரிய அளவில் தமிழில் எழுந்த முதல் உரைநூல் - ஆய்வுநூல், இவரால் அருளப்பட்ட ' திருக்குறள் மணி விளக்கவுரை ' ஆகும். வள்ளுவம் நுவலாத பொருளில்லை என்பதை நிறுவுவதற்காகவே தன் அறிவுத் துணையால் ஆய்வுத் துணையால் எங்கெங்கோ அலைந்து எப்படியெல்லாமோ, அகழ்ந்து எண்ணற்கரிய பொருட் செல்வங்களைக் கொண்டு வந்து கொட்டுகின்றார் தம் மணிவிளக்கக் களஞ்சியத்தில். இத்தன்மையை இவர் உணரச் செல்வத்தை ஆய்வுச் செல்வத்தை அணுகிக் காண்போம்.

அதிகார விளக்கம்

125 பக்கங்கட்கு முன்னுரை எழுதுகின்ற - 26 பக்கங்கட்குப் பாயிரவிளக்கம் எழுதுகின்ற இவர், ' இறை வாழ்த்து ' அதிகாரப் பொருளை 6 பக்கங்கள் (159-165) விரித்துரைக்கின்றார்.

'' திருக்குறளேட்டுக்குப் பாயிரம் வாழ்த்தாய் அமைந்ததுபோல அப்பாயிரத்துக்கு வாழ்த்தாய் அமைந்ததே இறைவாழ்த்து என்னும் அதிகாரம். பாயிரத்தின் அடுத்த மூன்று அதிகாரங்களும் முப்பால் களுக்கும் தனித்தனியாய் உரிமைப்படுத்தப்பட்ட பாயிரப் பகுதிக ளாதலால், இது முப்பாலுக்கும் உரிய பொதுப்பகுதியாய் முப்பாலுக் கும் முதல்வனை இறைவனை வாழ்த்துகின்றது.

முப்பாலின் தொகுதியே, அதன் அகப்பகுதியே வீட்டுப் பாலா தலால், இவ்வதிகாரம் வீட்டுப்பாலுக்குரிய பாயிரமாகவும் விளங்கு கின்றது.

புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, அவையடக்கம், செவி யறிவுறூஉ ஆகிய அந்நான்கனுள் இந்த இறைவாழ்த்து அதிகாரம் முதலாவதாகிய புறநிலை வாழ்த்துடன் ஒப்பது ஆகும்.

முப்பால் வாழ்த்து முறையிலும் முதல் ஏழு குறட்பாக்கள் (1-7 புறநிலையான முப்பால் வாழ்த்தாகவும், இறுதி மூன்று குறட்பாக்கள் (8-10) அகநிலை முப்பாலாகிய வீட்டுப்பால் வாழ்த்தாகவும் கருதத் தக்கவை எனலாம்.

இவை, திரு. அப்பாத்துரை அவர்களின் அதிகார ஆய்வில் சில துளிகள் - சீர்த்துளிகள்.

இவர் அதிகாரப் பொருளாய்வில் சொல்லாய்வும் நிகழ்த்துகின்றார். 'இறை', 'வாழ்த்து' என்ற சொற்களை 3 பக்கங்களில் (161-163) ஆய்ந்து அருமையான விளக்கம் நல்குகின்றார்.

'' இறைவாழ்த்து அதிகாரம் உண்மையில் உலக குருவாகிய ஆதிபகவனையே, கடவுளாகக் கொண்டு வாழ்த்தும் அதிகாரம் ஆகும், ''

இவ்விளக்கம் இவரின் தனிநோக்க ஆற்றலால் மலர்ந்ததாகும்.

தலைப்பிடல்

ஒவ்வொரு குறளுக்கும் முன்னால் அக்குறளின் நாடித்துடிப்பினை ஒலிக்கும் தொடர்களை, தலைப்புப்போல் அமைத்துள்ளார். இது வேறு உரையாசிரியர்கள் செய்யாத புதுமையாகும்.

எ. கா. '' ஆதி உலக குருவின் வடிவில் கடவுள் வாழ்த்து ''

(குறள் 1)

'' கடவுள் அறிவு வடிவானவர்;

கல்வியின் இலக்கு கடவுளே!'' (குறள் 2)

இப்படி ஒவ்வொரு குறளுக்கு முன்னும் இவர்தரும் தொடர்கள், விளம்பரத் தொடர் அமைப்பினை நினைவூட்டுவனவாய் - குறள்பால் கற்போரைக் கவர்ந்திழுக்கும் ஆற்றல் வாய்ந்தனவாய் விளங்குகின்றன,

உரைமுறை

இவரே தம் உரையை,

1. பொழிப்புரை, 2. கருத்துரை, 3. இலக்கணக் குறிப்பு உரை, 4. விளக்கவுரை, 5. சிறப்புரை, 6. பொருள்வளம், 7. தனிக்குறிப்புகள் என ஏழு பகுதிகளாகப் பிரித்து, குறட்பொருள் வளம் விரிக்கின்றார். அவர் முறையிலேயே அவர் உரைத்திறம் காண்போம்.

பொழிப்புரை

எ. கா,

' எழுத்துக்கள் எல்லாமே (தனித்தனியாகவும், வகைவகையாகவும், தொகுதி தொகுதியாகவும்) 'அ' என்ற எழுத்தை மூலமுதல் அடிப் படை எழுத்தாகக் கொண்டு நடைபெறுகின்றன. (அது போலவே) இயலுலக முழுவதுமே (கடவுள் உருவினனாகவே விளங்குகின்ற) ஆதி என்று சிறப்பிக்கப்படுகின்ற முதல் உலக குருவையே மூலமுதல் அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றது. என்பது இவர் முதற் குறளுக்குத் தரும் பொழிப்புரையாகும். இப்படியே ஒவ்வொரு குறளுக்கும் பொழிப்புரை தருகின்றார். பொழிப்புரையிலேயே தன் கருத்தையும் (ஆதிபகவன்-முதல் உலககுரு) விரிப்புணர்வோடு கலந் துரைக்கும் திறத்தை முதற்குறள் பொழிப்புரையில் காணலாம்.

கருத்துரை :

ஒவ்வொரு குறளுக்கும் பொழிப்புரையினையடுத்து கருத்துரை தருகின்றார்.

எ. கா. '' இனவள அறிவே உருவானவர் கடவுள். கல்வியின் பயன் அந்த அறிவே. (இனம் வளர்க்க உதவும் அறிவே உண்மையான அறிவு - அதைத் தரும் கல்வியே உண்மையான கல்வி. மற்ற எந்த கல்வியும், கல்வி ஆகாது. இனவள நோக்கமும், இனவள நோக்க அறிவும் உருவாகப் பெற்றவர் கடவுள்) (2 ஆம் குறளுரை)

இக்கருத்துரையில் அடைப்புக்குறிக்குள் தன் கருத்தை - தான் வள்ளுவத்தில் கண்ட கருத்தை அடைத்துத் தருகின்றார்.

இலக்கணக் குறிப்புரை

பெயர்தான் ‘இலக்கணக் குறிப்புரை’. இவர் தருவதோ இலக்கண விளக்கவுரைதான். 2 ஆம் குறளுக்கு 3 பக்கங்கள் (214-216) இலக்கண விளக்கம் தருகின்றார்.

1. சொற்றொடர் இலக்கணம், 2. சொற்பொருள் இலக்கணம் 3. சொல்லிலக்கணம், 4. யாப்பிலக்கணம், 5. எழுத்திலக்கணம் போன்ற பல்வகை இலக்கணக் கூறுகள் இவர்தம் இலக்கணக் குறிப்புரையில் இடம் பெறுகின்றன.

சொற்றொடர் இலக்கணம்

“இக்குறட்பா கேள்வி வடிவான ஒரே இணைவாசகம். இணை வாசகப் பகுதியாக ஒரு சார்பு வாசகமும் ஒரு முடிபு வாக்கியமும் உள்ளன. முடிபு வாக்கியப் பகுதியாக ஒரு பெயர் தழுவுதொடர் உள்ளது.” (2 ஆம் குறளுரை)

சொற்பொருள் இலக்கணம்

“வாலறிவன் என்பது வாலிமையினை உடைய அறிவினை உருவாகக் கொண்டவன் என்று பொருள்படுவது (2 ஆம் குறளுரை)

சொல் இலக்கணம் (ETYMOLOGY)

“ஆய் என்பது ஆகிய, ஆன என்பன போன்று ஆகு என்ற வினையடியான இறந்தகால வினையெச்சம். ஆய, ஆன என்ற வடிவங்கள் ஆகிய ஆகின என்பவற்றின் சிதைவுகளேயாம்”
(2 ஆம் குறளுரை)

யாப்பிலக்கணம்

“தொழாஅர் என்பதில் அளபெடை இசை அளபெடை எனப்படும். ஏனெனில் ஒரு நிரையசையளவேயான ‘தொழார்’ என்பதனை இது நிரைநேர் அதாவது புளிமாவாகிய ஓர் ஈரசைச்சீர் ஆக்கிச் செய்யுளில் சீர் நிரப்பிற்று” (2 ஆம் குறளுரை).

எழுத்திலக்கணம் (புணர்ச்சியிலக்கணம்)

“இது ‘தொழு’ என்ற வினையடியான எதிர்மறைப்பலர்பால் வினைமுற்று. ‘ஆ’ எதிர்மறை இடைநிலை. ‘அர்’ பலர்பால்

விகுதி. விகுதியின் அகரம் எதிர்மறையில் இயல்பாகக் கெடினும், அளபெடையில் மீட்டும் தோன்றிற்று '' (2 ஆம் குறளுரை)

விளக்கவுரை

இப்பெயரே இவ்வுரைப்பகுதியின் விரிவை உணர்த்தும்.

பொதுமையும் தனிமையும்

விளக்கவுரையின் முதல் பத்தியில் குறளின் பொதுமைப் பண்பையும் பொதுமையிடைத் தனிமைப் பண்பையும் சுட்டுகின்ருர்.

எ. கா. '' இவ்வதிகாரத்தில் கூறப்படும் கடவுளின் இனவாழ்க்கை தொடர்நிலைகள் மூன்றில் இக்குறட்பா உட்பட (2 முதல் 9 வரை எட்டுக்குறட்பாக்கள் கடவுள் இன வாழ்வின் குறிக்கோள் நிலையினர் என்ற மூன்ரும் தொடர்பு நிலையையே கூறுகூருக விரித்துரைக்கின்றன ''-பொதுமை.
'' இக்குறட்பா அவ்வழியில் கடவுளது அன்புருவக் குறிக்கோளைத் தனித்தனியே உயிர்தோறும் செயலாற்றும் அவரது அன்புப் பண்பை விதந்துரைக்கின்றது ''
தனிமை (3 ஆம் குறளுரை)

நிரல்படு பொருள்

விளக்கவுரையின் இரண்டாம் பத்தியில் குறளின் வரிசைப்பொருளை - நிரல்படுபொருளை உரைக்கின்ருர்.

எ. கா '' முதற்குறட்பாவில் கடவுளை வேதமுதல்வர் அல்லது வேது உருவினராகவும், இரண்டாவது குறட்பாவில் அவரை அறிவுருவினராகவும் சிறப்பித்த திருவள்ளுவர், அடுத்து இக்குறட்பாவில் அவரை அன்புருவினரென்று பாராட்டும் அருமைநயம் உணர்ந்து மகிழத்தக்கது ஆகும்.'' (3 ஆம் குறளுரை)

இயைபுப் பொருள்

மூன்ரும் பத்தியில் இக்குறட்பொருளை பிற குறட்பொருட்களோடு இயைத்துக் காட்டுகின்ருர்.

எ. கா. '' முப்பால் வாழ்வுகளுடன் தொடர்புடையவரான கடவுளை இன்ப உருவினரான இன முதல்வர் என்று காட்டித் திருவள்ளுவர் இக்குறட்பாவிலும், 7, 10 குறட்பாக்களிலும் அவரது இறைவாழ்வுத் தொடர்பை வலியுறுத்திச் சிறப்பிக்கின்ருர் '' (3 ஆம் குறளுரை)

சொல் - தொடர் - பொருள்

இவர் சொற்களுக்கும், தொடர்களுக்கும் கூறும் பொருள் முறையைப் பின்வருமாறு பகுக்கலாம்.

அ. நேர்ப்பொருள், ஆ. குறிப்புப்பொருள், இ. வேர்ச் சொற்பொருள் ஈ. இனச்சொற்பொருள், உ. இடப்பொருள் (சொற்றொடரில்) ஊ. சிறப்பித்தபொருள், எ. ஒப்புப் பொருள் (1) பிறமொழிச் சொற்களுடன் (2) பிறர்தரும் பொருளுடன், ஏ. இலக்கணப்பொருள், ஐ. வழக்குப் பொருள்.

அ. நேர்ப்பொருள்

எ. கா. 'மலர்' என்பது மலர்ச்சிப் பருவம் எய்திய பூவைக் குறிக்கும் (5 ஆம் குறளுரை)

ஆ. குறிப்புப்பொருள்

எ. கா. 'என்கொல்' என்பதிலுள்ள 'கொல்' அசை மட்டுமன்று. வினைப்பொருள் குறித்த அசை மட்டுமன்று. ஏனெனில் 'கொல்' இல்லாமலே 'என்' வினைக் குறித்த சொல் ஆகும். 'வேறு என்னதான் இருக்க முடியும்' என்று கேட்கும் தொனிப்பொருளை அது தருகின்றது.
(2 ஆம் குறளுரை)

இ. வேர்ச்சொற்பொருள்

எ. கா. 'வேண்டுதல் வேண்டாமை இலான்' என்ற வள்ளுவத் தொகைநிலையின் ஆழ்ந்த முழுப்பொருளை நாம் 'வேண்டு' என்ற சொற்பகுதி கடந்து வேர்ச் சொற் படிவங்களிலேயே காணலாம்.

'வேண்டு' என்ற சொல் விரும்புவதையும் (வேட்கை) விரும்பிக் கேட்பதையும் (வேண்டுகோள்), கடவுளிடம் நேர்ந்துகொள்வதையும் (வேண்டுதல் செய்தல்), சார்பு கொள்வதையும் (வேண்டியவர் வேண்டாதவர்) குறிக்கும். ஆனால் இதன் வேர்ச்சொல்லாகிய வேள் என்பது குடிமன்னன், மணமகன், காமதேவன், கடவுள் என்ற சுட்டுப்பொருள்களை உடையது. இவற்றின் பொதுப் பண்பாகிய சொற்பொருள் எல்லார் விருப்பத்துக்கும் உரிய தலைவன் என்பதேயாகும்.'' (4 ஆம் குறளுரை)

ஈ. இனச்சொற்பொருள் :

எ. கா. '' கவலை என்ற சொல் இவர் (இரண்டுபட்ட கிளை), கவலை இரண்டுபடு (நீர் இறைக்கும்பொறி), கவலை (இருசுவருடைய இலை யுடைய கிழங்கு), கவர்தல் (கிளைத்தல், இரண்டலகால் பற்றுதல்), கவிராயம் (இது அலகுடைய பொறி), கவர்வு (இரண்டகம்), கனிவு கபடம், கப்பு (இரு கவர்), கப்பி (இரு சுவரிடைக்கரணை; இரு சுவரிடைச் சக்கரம்), கவின் (பற்றிஈர்க்கும் அழகு), கவிதை ஆகிய வற்றுடன் தொடர்புடைய தமிழ்ச்சொல் ஆகும்'' (7ஆம் குறளுரை) இவ்வினச் சொற்கள் தரும் பொருள் நோக்கி, கவலை என்பது இரண்டுபட்ட நிலை, அதாவது மனக்கலக்கம் அல்லது துயரம் குறிப்பதாகும்' எனப் பொருள் கூறுகின்றார்.

உ. இடப்பொருள் (சொற்றொடரில்) :

சொற்றொடரில் ஒருசொல் இடம் பெறுந்தன்மை நோக்கிப் பொருள் கூறுகின்றார்.

எ. கா. ''சேர்ந்தார் என்பது இடையறாது உளங்கொண்டு அன் பால் இணைந்து தாம்வேறு அதுவேறு அற்றநிலை எய் தியவர். இங்கே தொகைநிலை பயனிலை யாதலால் சேர்ந்தாரே யாவர் என்று பொருள்பட்டு முடிவதாகும்'' (3ஆம் குறளுரை)

ஊ. சிறப்பித்த பொருள் :

எ. கா. ''கடத்தல் என்னுது 'நீந்தல்' என்றதனல் சமுதாய இனவாழ்வுகளின் முழுப் பயனும் நுகர்தல் குறிக்கப் பட்டது'' (8 ஆம் குறளுரை)

எ. ஒப்புப் பொருள் :

1. பிறமொழிச் சொற்களுடன்

எ. கா. '' நீடுவாழ்வார்'' என்பது அழியாத இன்பம் கைவரப் பெற்று என்றும் நின்று நிலவுபவர்கள் எனப் பொருள் படுகிறது, இத்தமிழ்த்தொகை நிலைக்கு இந்தப் பொருள் உண்டு என்பதை இன்று நாம் வழங்கும் இத்தொகைக் குரிய சமஸ்கிருத மொழிபெயர்ப்புத் தொகை நிலை (சிரஞ்சீவி சிரம் -- நீண்டகாலமாக, சீவி — வாழ்பவர்) காட்டும் '' (3ஆம் குறளுரை)

2. பிறர்தரு பொருளுடன் :

எ. கா. '' புரிந்தார் மாட்டும் என்பதன் சொற்பொருள் 'விரும்பிய வரிடத்து, என்பதுதான். விரும்பிப் புகழ்ந்தவர்,

விரும்பிப் புகழ் பாடியவர் விரும்பிப் புகழ்பாடி வழிபட்டவர் என்றெல்லாம் பழைய உரையாசிரியர்கள் இதற்குப் பொருள் விரித்துள்ளனர். பரிமேலழகர் வாளா விரும்பியவர் என்று கூறியமைந்தார்'' (5 ஆம் குறளுரை)

ஏ. இலக்கணப் பொருள்

எ. கா. ''ஏகினன் என்பதில் ஏகுதல் என்பது விரைந்து செல்லுதல். மிசை என்ற உருபுடன் வருதால், இங்கே அது விரைந்து சென்று அமருதல் குறிக்கும்'' (3 ஆம் குறளுரை)

ஒ, வழக்குப் பொருள்

எ. கா. '' புரிதல் என்பது இன்றுசெய்தல் என்ற பொருளில்தான் மிகுதி வழங்குகிறது. விளங்குதல் என்ற பொருளிலும் பேச்சு வழக்கில் இது பயன்படுத்தப்படுகின்றது. (5 ஆம் குறளுரை)

சிறப்புரை

இவர் சிறப்புரையில் ஒவ்வொரு குறள் கூறும் நெறியினையும் சுட்டுகின்ருர்.

எ. கா. குறள் 1 '' இக்குறட்பா வள்ளுவத்தின் வேதநெறி கூறிற்று''.

குறள் 2 இக்குறட்பா வள்ளுவத்தின் அறிவுநெறி (ஞான மார்க்கம்) வகுத்துரைத்தது.

பொருள்வளம்

அ. அணிகள், ஆ. எதிர் எதிரினைத் தொடுப்புகள் இ. அடைமொழிகள், ஈ. எதுகை. மோனை, உ. சிறப்புச் சொல்வழக்குகள் ஆகிய நிலைக்களன்களில் பொங்கித் ததும்பும் வள்ளுவப் பொருள் வளத்தைத் தேக்கிக் காட்டுவது. இப்பொருள்வளம் எனும் உரைப் பகுதியின் பணியாம்.

அ. அணிகள் :

எ. கா. '' இலக்கணத்தில் இது எடுத்துக்காட்டுவமை அணி என்றே அழைக்கப்பட்டாலும், இக்குறட்பாவிலேயே அது ஓர் ஒப்புயர்வற்ற எடுத்துக்காட்டு விளக்கமாகவும், முழு விளக்க உவமையாகவும் அமைந்துள்ளது''

என முதற்குறள் உவமையைச் சுட்டுபவர் அது முழு விளக்க உவமையாகத் திகழுமாற்றை 10 பக்கங்கள் (182-191) விளக்குகின்ருர்.

ஆ. எதிர் எதிரிணைத் தொடுப்புகள்

இது இவரின் ஆய்வுப்புலன் அகழ்ந்தெடுத்த அரும்புதையல்-பொருட்புதையல்.

எ. கா. ' இருள்சேர் இருவினையும் ' என்பதன் எதிரிணையாகப் பொருள்சேர் புகழ் ' என்பது நிற்கிறது. இருளை அகற்றும் ஒளி பொருள் என்றும், இருவினைக்கறை கழுவிப் போக்கும் நீர்மம் புகழ் என்றும் இவ்வெதிரியிணையடுக்குச் சுட்டிக் காட்டுகின்றது '' (5 ஆம் குறளுரை)

இ, அடைமொழிகள்

எ. கா. ' மலர்மிசை ஏகினன் என்ற இறைவனைக் குறித்த அடை-மொழி பூமேல் நடந்தான் என்ற அருகனைக் குறித்த பெயரையும். புத்தரைக் குறித்த பெயரையும், நினைவூட்டுவன ஆகும். இவ்வழக்குகள் புத்த சமண சமயங்களின் மீது படர்ந்த வள்ளுவ நிழல்கள் என்று கூறத்தகும் '' (3 ஆம் குறளுரை)

ஈ. எதுகை - மோனை

எ. கா. ' கோளில் என்பதற்குக் 'குணம்' (குணமிலவே என்பதிலுள்ள குணம்) மோனை. ஆனால் இது சீர் முதலில், அதிலும் முதற்சீர் மூன்றும் சீராக, அடியின் நேர்பாதிப் பகுதியில் வந்த வெளிப்படை மோனை ஆகும். எண் குணத்தான் என்பதிலுள்ள குணமும் இதுபோலவே இவ் விரண்டுடன் மோனைதான்-ஆனால் இது குறிப்பு மோனை, மறைபுதைவான மென்னய மோனை, ஏனெனில் இது சீர் முதலிலும் வரவில்லை, முதற்சீர் நான்காம் சீர் மோனையாகவும் அமைகிறது உயிர்களில் வெளிப்படையான உருவுடைய வளரும் பயன் கடவுளிடம் கருவளமாக உருவிலா நிலையில் உட்கரந்துள்ளது என்பதை இது சுட்டுகிறது.

உ. சிறப்புச் சொல்வழக்கு

' திருவள்ளுவர் வழங்கும் தமிழ்ச்சொற்கள்-இனத்தமிழ்ச் சொற்களான வள்ளுவச் சொற்களாகும் ' எனப் போற்றும் இவர் அத்தன்மைய சொற்களின் வள்ளுவப் பண்பை மிகப்பொலிவுடன் விரித்துரைக்கின்றார்.

எ. கா. ‘இடும்பை’ (குறள் 4), அந்தணர் (குறள் 8) போன்ற சொற்களுக்கு இவர்தரும் விளக்கங்கள் வள்ளுவச் சொல்லாட்சியின் திறன் விரிப்பதாகும்.

தனிக்குறிப்புக்கள்

இப்பகுதியில். பிற திருக்குறள் உரையாசிரியர்களின் கருத்துக்களை ஒப்பிட்டு நோக்குகின்றார்; குறை நிறை காட்டுகின்றார்? பின் உரிய பொருள் உரைக்கின்றார்.

குறை — எ. கா.

‘பகுத்தறிவாளராகிய புலவர் குழந்தை கொட்டையை மட்டும் எடுத்து விட்டுச் சுளையை எளிதாக விழுங்குபவர் போல, கடவுள் என்ற கருத்தை மட்டும் மெல்ல நீக்கி விட்டு, திருவள்ளுவரின் குறட்பாவுக்கு மிக எளிய வெள்ளையுரையையே செய்துள்ளார். ‘உண்மை அறிவைப் பெறுவதே கல்வியின் பயன் ஆகும்’ என்பது அவர் கருத்துரை. இறைவாழ்த்து அதிகாரத்துக்கும் இக்கருத்துடைய குறட்பாவுக்கும் என்ன தொடர்பு என்பதை அவர் விளக்கவில்லை. (2 ஆம் குறளுரை)

நிறை — எ. கா.

‘தத்துவ விளக்கத்தில் இறங்காமலே, பொருள் விரிக்கவோ குறுக்கவோ நாடாமலே, கொண்டு கூட்டி முடித்துக் காட்டவும் முனையாமலே, முற்கால உரையாசிரியர் காலிங்கரும் இக்காலப் பேரறிஞர் முனைவர் மு. வரதராசனாரும் குறட்பாவுக்குச் செம்பொருள் கூறியுள்ளனர்’’ (2 ஆம் குறளுரை)

உரியபொருள்

‘வாழ்வின் இலக்கு, கடவுள், அவர் அறிவுருவானவர். வாழ்வின் பயிற்சி, கல்வி. அதன் இலக்கு அறிவு. அதுவளரும் அறிவு அவ்வளர்ச்சியின் இலக்கே கடவுள்’ (2 ஆம் குறளுரை)

தனித்துவம்

இவரின் உரைப்போக்கிலும், உள்ளும் போக்கிலும் பல தனிப் பண்புகள் அமைந்துள்ளன.

உரைத்தலில்-தனிப்பண்பு

அ. உயரிய தனித்தமிழ் நடை, ஆ. கவிதை மின்னல் இ. உணர்ச்சி-உத்தி, ஈ. உவமையாட்சி, எ. சிறந்த சொல்லாட்சி, ஏ. ஆய்வுமுறை.

அ. உயரிய தனித்தமிழ்நடை

எ. கா. ''அறம் என்ற சொல் ஊழின் ஆக்கநோக்கிய இயக்க ஆற்றல் ஆகும். புயலிலிருந்து பிறந்து, தென்றலாக வளர்ந்து, இனவளமாக மலர்ந்து எல்லையற்ற பொங்குமா வளப்பண்பாக அது பொதுளுகின்றது'' (8 ஆம் குறளுரை)

ஆ. கவிதை மின்னல்

எ. கா. ''குறட்பா எதிர்மறையில் கூறப்படுவது கடலின் இந்த உலைவூட்டும் அலை வாட்டத்தை அகக்கண்முன் சுட்டிக் காட்டுவதாயுள்ளது'' (10ஆம் குறளுரை)

இவ்வுரையில் 'உலைவூட்டும் அலைவாட்டம்' என்ற சொற்றொடரில் கவிதைப் பண்பு அலையாடக் காணலாம்.

இ. உணர்ச்சி-உத்தி

சிலவிடங்களில் இவர் உரை வெறும் உரை விளக்கமாய் அமையாமல் உணர்ச்சி விளக்கமாகிற கற்போரை ஈர்க்கும் தன்மை யுடன் இயலுகின்றது.

''தோழர்களே, நீங்களே பாருங்கள். இந்த உலகத் திலேயே உங்கள் கண்முன் யார் யார் இன்பமுடன், அழியா இன்பமுடன், இறவா வாழ்வு வாழ்கிறார்கள், வாழ்ந்திருக் கிறார்கள் என்பதைக் கூர்ந்து கவனியுங்கள்; அவர்கள் பண்புகளைப் பற்றிச் சிந்தியுங்கள் புகை உள்ள இடத்தில் தீயை உயத்துணர்வது போல. அத்தகைய இறவா இன்பவாழ்வின் மூலகாரணத்தை நீங்களே காணலாம்; என்று வள்ளுவர் பேசுவதை நாம் இங்கே அகக் கண்ணில் காண்கிறோம்; அகச்செவியில் கேட்கிறோம்'' (3 ஆம் குறளுரை)

உணர்ச்சிமயமான உரைக்கு இது ஒரு சான்று. இங்கு, வள்ளுவரை யே பேசவைத்து வள்ளுவப் பொருளை நாடகக் காட்சியாக்கும் உத்தியையும் உணர்ந்து வியக்கின்றோம்.

ஈ. உவமையாட்சி

இவர் மிக அழகிய உவமைகளைத் தம் உரையிடை ஆங்காங்கே அமைத்து உரைக்கும் பொருளுக்கும் ஒருங்கே மெருகூட்டுகின்றார்.

எ. கா. ''தாளை வணங்காத் தலை என்ற தொகை நிலைப்பகுதி இக்குறட்பாவில் ஒருகால் அடியளவேயானாலும் பனித் துளி காட்டும் பனைநிழல்போல் முப்பாலேடு முழுவதை

யுமே நம் உளக்கண்முன் அழகிய மணிப்படமாகக் காட்டுவதாகும்'' (5ஆம் குறளுரை)

'' கிட்டத்தட்ட நேர்மை உரை கண்டுணர்ந்தும், 'கடவுள் கல்வியின் இலக்கு' என்று கூறத் துணியாத நம் காலப் போலிப் பகுத்தறிவு, நம் காலப் போலி ஆத்திகம், ஆகிய வற்றின் பிடியில்பட்டு, கண்டு எடுத்து வைரத்தை எறிந்து விட்டுக் கண்ணாடித் துண்டுகளைப் பொறுக்கி எடுத்து அடுக்குகிறார் கவிஞர்'' (2 ஆம் குறளுரை)

எ. சிறந்த சொல்லாட்சி

சிறந்த பொருள் செறிந்த, புதுமையான சொற்கள் பல இவர் உரையில் ஆளப்படுகின்றன. இவர் புதுவகையில் சொற்களை இணைத்து புதிய சொல்லாக்கங்கள் செய்கின்றார்; பிறமொழிச் சொற்களை மிகத் திறம்பட மொழிபெயர்த்து, தமிழின் சொல்வளத்தைப் பெருக்குகின்றார்.

1. புதிய சொல்லாக்கங்கள் (கூட்டுச் சொற்கள்)

எ. கா. 1. நீடுநல நாட்டம், 2. பொங்கற்பண்பு, 3. சுரங்கப் பொருள்வளம், 4. எதிரிணைத் தொடுப்பு, 5. சலசலப்புத் தொடர்கள், 6. அருநிகழ்வு, 7. நிறையா முழுநிறை, 8. மீமனிதர், 9. பற்றார்வம் (ஒருமை அக்கரை) 10. எண்பிக்கிறது, 11. அச்சார அருள், 12. உடன் துணைவர்.

2. மொழிபெயர்ப்புச் சொற்கள்

எ. கா.
1. வரையிலி - Infinity
2. ஈறிலி - Irrational Number
3. வரையளி - Finite
4. கருவளநிறை - Potentiality
5. ஒழுக்கமுறை ஒப்பியைவுத் தொடர்பிணைவு நிலை - Correlated system of ethics
6. ஓயாத்திருத்த நிலை-Ever-continuous adjustment
7. மேல் நிலைப்பாடு - Sublimation
8. திருகுமறுகுவழி - The lay brinth
9. முடிந்து முட்டிய இடம் - Terminous
10. வகைக்கீழகடு - Infra species
11. மீமுகடு - Summum genera
12. எல்லைக்கட்டளை - Standard Ideal or Taagest
13. அறத்தத்தளிப்பு - தர்ம சங்கடம்

14. நுண்ணியல்வான் - சிதாகாசம்

ஏ. ஆய்வுமுறை

இதுகாறும் கண்டவற்ருல் இவர் உரை மிகப்பெரும் ஆய்வுரை என்பது புலன். இங்கு, ஆய்வு முறையின் சில தனிக்கூறுகளைக் காண்போம்.

1. ஆங்கிலத்தில் விளக்கம்

தான் உரைக்கும் பொருளின் தெளிவு கருதி, சிலவிடங்களில் ஆங்கிலவிளக்கமும் தருகின்ருர்

எ. கா. ''பண்பு ஒரு பொருளின் அல்லது உயிர்ப்பொருளின் சூழலியைவுத் திறத்தின் இயல்பான வளர்ச்சியையோ, அல்லது தொடக்கத்தில் செயற்கையாகத் தோற்றினும் அல்லது அடிக்கடி செயற்கையாகப் படிப்படியாக உருப் பெற்ருலும், நீடித்த மரபில் பயின்று கிட்டத்தட்ட இயற் கையாக ஆகிவிட்ட வளர்ச்சி '' குறிப்பதாகும் (9 ஆம் குறளுரை)

1. Gradual and continued 'development in longtime duration as second nature.

2. விரிவும் செறிவும்

விரித்து ஆய்ந்து கண்ட முடிவை செறித்து விதியாக்குவது ஆய்வின் பண்பாகும் - முறையாகும்.

எ. கா. வாழ்வின் இலக்கு, கடவுள். அவர் அறிவுருவானவர். வாழ்வின் பயிற்சி, கல்வி. அதன் இலக்குஅறிவு. அது வளரும் அறிவு. அவ்வளர்ச்சியின் இலக்கே கடவுள்'' (2 ஆம் குறளுரை)

2 ஆம் குறளுக்கு 27 பக்கங்களில் (214-240) ஆய்ந்து விரிந்த பொருளுரைத்தவர் அக் கருத்துக்களைச் சுருக்கி மேற்கண்ட வடிவம் தருகின்ருர்.

உணர்தலில் - தனிப்பண்பு

வள்ளுவர்பால் எல்லையிலாப் பத்தி, வள்ளுவத்தின்பால் கரை கடந்த காதல், தமிழின்பால் அளவிறந்த பற்று, மும்மை (மூன் றெனும் எண்ணிக்கை)யின்பால் முழுமோகம்-இவை இவர் உணர் வின் தனிப்பண்புகளாம்.

பத்தி-காதல்-விளைவு

வள்ளுவர்பால் இவர் கொண்ட அளவிலா பத்தி, வள்ளுவ ரையே இறைவனுகவும்-இறைவன் தன்மை பொருந்திய ஆதி பகவ னுகவும் காணச்செய்கின்றது; கரை கடந்த வள்ளுவக் காதல், அதனை வள்ளுவர் அருளிய தமிழ் வேதமாகக் காணச் செய்கின்றது.

எ. கா '' திருவள்ளுவரும் அவர் காலத்தவரும் அவர் காலத்துக்கு முற்பட்டவர்களும் யார் யாரைப் பகவர் எனக்கொண்டனர் யார் யாரை ஆதிபகவராகக் கொண்டிருந்தனர் என்பன வற்றை நம்மால் இன்று அறியமுடியாது. ஆனுல் திரு வள்ளுவர் காலத்துக்குப் பின்னும் இன்றுவரை பகவர்கள்

பலர் உலகமக்கள் தம்மை வழிபட வாழ்ந்து வந்துள்ளார் கள் என்பதிலும் அப்பகவர்களுள் மூல வழிகாட்டியான மூல முதற்பகவர் திருவள்ளுவரே யாவர் என்பதிலும் அம் மூலப்பகவர் அருளிய மூலப் பழமறையே முப்பாலேடாகிய திருக்குறள் என்பதிலும் ஐயமில்லை.'' (முதற் குறளுரை)

என்னும் அவர் கூற்றுலேயே அவர் வள்ளுவரையும், வள்ளுவத் தையும் எப்படி உணருகின்றூர் என்பதை நாம் உணரலாம். வள் ளுவரை ஆதி குருவாக வணங்கும் இவர் இறைவாழ்த்து அதிகாரத் தையும் குரு வாழ்த்தாகவே காண்கின்றூர்.

ஆ. தமிழ்பற்று

எ. கா. 'இக்கால அறிஞர் பலர் குணம் என்பதைச் சமஸ்கிருதச் சொல் எனக்கருதி, பண்பு அதன் தனித் தமிழ் மொழி பெயர்ப்புஎனக்கொண்டு வழங்குவர் இது முற்றிலும் தவறு ஏனெனில் குணம் ஆரியச் சொல் அன்று. இந்தியாவுக்கு வெளியேயுள்ள எந்த ஆரிய (இந்தோ-ஐரோப்பிய) இனக் குழுவின் மொழிகளிலும் இதனுடன் தொடர்புடைய சொற் கள் கிடையாது என்று கூறலாம்.'' (9ஆம் குறளுரை)

இவருடைய தமிழ்ப்பற்று, வள்ளுவ-குணத்திற்கு இவரைத் தனிப் பொருள் காணச்செய்கின்றது. அதாவது 'குணமும், பண்பும் ஒன்றல்ல என்றுணர்த்துகின்றது.

''பண்பு என்பது தன்மையிலிருந்து இயல் சூழ்நிலை யிடையே குணநோக்கி 'வளரும் வளர்ச்சி. இதனல் குணம் என்பது வளரும் பண்பின் எல்லைக்கட்டளை ஆய்விடுகிறது. குணம் இதனுலேயே வளரும் பண்பின் பயன் என்ற பொருளைத்தருகிறது''

இது குணத்திற்கு, பண்பிற்கு அவர் உணரும்-உணர்த்தும் நுட்பப் பொருண்மை.

இ. மும்மைமோகம்:

எதனையும் மூன்ருகக்கானும் - எதிலும் மூக்கூறுகளை - முத்தன் மைகளை உணரும் உள்ளாற்றல் இவரிடம் ஒளிந்துளது.

எ.கா. ''திருவள்ருவரது கடவுள்-உயிர்-இனம் என்ற முப்பாற் சக்கரக் கோட்பாடு இந்த இரு நிலைகளும் கடந்தது''
(2 ஆம் குறளுரை)

.'' தென்றலும் கதிரவனும் வண்டும் ஒரே வேலின் மூன்று முகவர்களே. இது போலவே உயிரின் முதற் செவ்வியைத் தூண்டும் காதலும் இன ஆர்வமும் இரண்டாவது செவ்வி தூண்டும் ஞானகுருவும் ஒரே இறைவனின் மூன்று முகவர் களேயாவர்' (3 ஆம் குறளுரை)

இவரின் இந்த உள்ளாற்லல்-உள்ளுமாற்றல் வள்ளுவத்தில் பல புது மைகளைக் காணச்செய்கின்றது.

ஆழ்ந்து சிந்திக்கவேண்டிய ஆட்சி மொழிச் சிக்கல்

- முனைவர் சாலை இளந்திரையன்

இந்த நாட்டிலே அணையாமல் இருந்துவரும் பிரச்சினைகளிலே ஆட்சிமொழிப் பற்றிய பிரச்சினையும் ஒன்று. '' இந்தியே நாட்டின் ஆட்சிமொழி '' என்று அரசியல் சட்டம் கூறுகிறது. ஆனாலும், வளமான பல மொழிகளையும், அவை ஒவ்வொன்றுக்கும் உரிய நெடிய வரலாறுகளையும் கொண்ட இந்த நாட்டிலே, அரசியல் சட்டத்தின் இந்த விதியை நடைமுறைப்படுத்துவது அவ்வளவு எளிதாக இல்லை. இது தொடர்பாக எழுப்பப்படும் உணர்ச்சியே ஆட்சிகளை மாற்றிவிடும் அளவுக்கு எழுந்து கொந்தளிப்பதையும் நாடு கண்டுவிட்டது. இவைகளைப் பார்க்கையில்,-ஆட்சிமொழிப் பிரச்சனை மிக ஆழமான சிந்தனையையும் தெளிவானதோர் புதிய திட்டத்தையும் எதிர்நோக்கி நிற்கிறது என்கிற உண்மை புலப்படுகிறது.

இந்துஸ்தான் டைம்ஸ்

மத்திய அரசின் உள்ளாட்சித் துறையில் ஆட்சிமொழிச் சிக்கலுக்குத் தீர்வு கண்டு வழிநடத்துவதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. ஆட்சிமொழிக்குழு என்னும் பெயர்கொண்ட அந்தக் குழுவின் செயலாளர் திரு. ஆர். ப்பி. நாயக் அவர்கள் அண்மையில் சில கருத்துக்களை வெளியிட்டுள்ளார். தாய்மொழியும் ஆங்கிலமுமே போதும் என்று சொல்லிக்கொண்டு சில மாநிலங்கள், இரண்டு மொழிகளையேசுற்பித்து வருகின்றன. இந்திபடிக்காவிட்டால் இளைய தலைமுறையினருக்கு ஏற்படக்கூடிய இன்னல்களை இவர்கள்எண்ணிப் பார்க்கவேண்டும். குறிப்பாகத் தென்மாநிலங்கள் தாய்மொழியோடு இந்தி, ஆங்கிலம் என்னும் இரண்டு மொழிகளைக் கற்பிக்க முன்வரவேண்டும்; அதேபோல், இந்திப் பகுதியில் உள்ள மாநிலங்களும் ஏதாவது ஒரு தென்னிந்திய மொழியைக் கற்பிக்கமுயலவேண்டும்.' இப்படிக் கருத்தைத் தெரிவித்துள்ளார் திரு. நாயக்.

இதைப்பற்றி (22 12—76) ஒரு தலையங்கம் எழுதியுள்ள புதுடில்லி 'இந்துஸ்தான் டைம்ஸ்' ஆங்கிலப் பத்திரிகை, பின்கண்ட விதமாகக் கருத்துத் தெரிவிக்கிறது. 'திரு. நாயக் அவர்களின் கருத்து வரவேற்கத் தக்கதே. ஆனால், இந்திப் பகுதியில் உள்ள மாநிலங்கள் ஒரு தென்னிந்திய மொழியைக் கற்பதில் போதிய ஆர்

வம் காட்டவில்லை. தங்கள் மாணவர்கள் அந்த மொழியைக் கற்க வேண்டும் என்று விதித்து அதைச் செயற்படுத்தவும் அவர்களால் இயலவில்லை. மும்மொழித் திட்டம் சரிவரச் செயற்படாததற்கு இவைகளே மூலகாரணங்கள். உண்மைநிலை என்னவென்றால், இந்தி மொழிப் பகுதிகளில் உள்ள பெருநகரங்களில் திடீர் திடீரென்று தென்னிந்திய மொழி ஆர்வம் தலையெடுக்கிறது. விரைவிலேயே, — தோன்றிய சுவடு தெரியாமல், அந்த ஆர்வம் மடிந்தும் போகிறது.

'' இதற்கு அடிப்படையாக உள்ள காரணத்தைக் கண்டறிந்து களையாமல் வெறும் விருப்பங்களை மட்டுமே வெளியிட்டுக் கொண்டு இருப்பதிலே பயனில்லை. இந்திபேசும் மாநிலங்களைப் பொறுத்த அளவில், — தாய்மொழி, ஆங்கிலம் என்பவைகளுக்கு அப்பால் வேறு ஒரு மொழியைக் கற்க வேண்டிய தேவை எதுவும் இல்லை. அந்த மூன்றாவது (தென்னிந்திய) மொழி, அவர்களின் வாழ்விலே எது ஒன்றுக்கும் பயன்படப் போவதில்லை. அப்பால்,-இந்தியே ஆட்சி மொழி என்று ஏற்கப்பட்டுவிட்டதால், ' வேறொரு மொழியைக் கற்காவிட்டாலும் நமக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படப்போவதில்லை '' என்கிற எண்ணம் இந்திமொழிப்பகுதில் உள்ள மக்களிடம் வலுவாக ஏற்பட்டுள்ளது. இப்படிப்பட்ட நிலைமைகள் நீடிக்கும்போது, அவர்கள் ஒரு தென்னிந்திய மொழியிலே எப்படி அக்கறை கொள்ளுவார்கள்.

'' எல்லா மொழியினருக்கும் வாய்ப்பும் சிரமும் ஒரே அளவாக இருக்கவேண்டும் என்பதற்காகவே மும்மொழித் திட்டம் வகுக்கப் பட்டது. ஆனால், இந்திமொழிப் பகுதியினர் (மேற்கண்ட காரணங்களால்) போதிய அக்கறை காட்டி ஒரு தென்னிந்திய மொழியைப் பயிலாததால் இந்தி பேசாத பகுதிகளில் உள்ள மக்களும், இந்தியைப் பயில்வதில் தயக்கம் (எதிர்ப்புக்) காட்டுகிறார்கள்.''

எதார்த்த நிலையை இப்படி சுட்டிக் காட்டும் ' இந்துஸ்தான் டைம்ஸ்' 'இந்தப்பிரச்சனையை மறுபரிசீலனை செய்யப்படவேண்டும்' என்பதையே இதன்மூலம் குறிப்பாக உணர்த்துகிறது.

வெறுப்பை வளர்ப்பதோ ?

பல மொழிகளைக்கொண்ட ஒரு பெரிய நாட்டில் ஒரே ஒரு மொழியை ஆட்சிமொழி அல்லது தொடர்புமொழி என்று ஆக்குவதில் பல சிக்கல்கள் உண்டாக வாய்ப்பு இருக்கிறது. அதற்கு நாம் காண முந்தும் தீர்விலேயும் அதே சிக்கல் எழ இடம் இருக்கிறது.

தெற்கே உள்ளவர்கள் இந்தி படிக்கவேண்டும் என்பதற்காகவே வடக்கே உள்ளவர்கள் ஒரு தென்னிந்திய மொழியைப் படிக்க வேண்

டும் என்பது கொள்கை அளவில் நன்ருகத்தான் இருக்கிறது. ஆனல் கல்விக் காலத்தில் சில மணிநேரங்களையாவது செலவிட்டு ஒரு தென்னிந்திய மொழியைப் படிக்கிற வட இந்தியப் பிள்ளைக்கு அந்த மொழி எதற்காவது பயன்படுகிறதா என்று நாம் சிந்திக்க வேண்டாமா? தன்னுடைய வாழ்வில் எந்த வகையிலும் பயன்படாத ஒன்றைக் கற்கவேண்டும் என்று ஒரு பிள்ளையைக் கட்டாயப் படுத்துவது எப்படி முறையாகும்?

உண்மையாகவே மொழி உறவையும் பண்பாட்டு ஊடாட்டத்தையும் நாம் விரும்புவோமானல்,-இந்திமொழிப் பகுதிகளில் உள்ள பள்ளிக்கூடத்திற்கு அப்பாலும் (பிற்கால வாழ்விலும்) தென்னிந்திய மொழிகளுக்கு முக்கியத்துவம் ஏற்படுத்த வேண்டும். சான்ருக, மத்திய அரசின் அலுவலுக்குப் போகிற இந்திப் பிள்ளை, தன் தாய்மொழியோடு ஒரு தென்னிந்திய மொழியிலும் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும் என்று விதிக்க வேண்டும். அப்படித் தேர்ச்சி பெற்றவர்களை மட்டுமே அகில இந்தியப் பணிகளுக்கு தேர்ந்தெடுக்க வேண்டும். அதேபோல், இந்திபேசாத பகுதியின் பிள்ளை, தன் தாய்மொழியோடு இந்தியும் கற்றிருந்தால்மட்டுமே அவனை அகில இந்திய பணிக்குத் தேர்ந்தெடுக்க வேண்டும். இதற்கு ஏற்ற விதமாக, இந்திமொழி பேசாத மாநிலங்களில்,- மத்திய அரசுப்பணி உட்பட எல்லாப் பணிகளும் அந்த மாநில மொழியிலேயே நடக்குமாறு செய்யவேண்டும்.

இப்படிப்பட்ட எந்தத் தேவையையும் ஏற்படுத்தாமல்,- ‘அவன் ஒருவன் இந்தியைப் படிப்பதற்காக நீ வேருெரு மொழியைப் படித்தாக வேண்டும்’ என்று வற்புறுத்தினல், அவன் நிச்சயமாக படிக்கமாட்டான். தன் தாய்மொழியாகிய இந்தியைக்கூட நாளடைவில் அவன் வெறுக்கத் தொடங்கிவிடுவான்.

மறுபரிசீலனை தேவை

வடஇந்திய மாநிலங்களில் தென்னிந்தியமொழிகளில் போதிய ஆர்வம் இல்லை என்பது மட்டுமல்ல; அரசியல் சட்டத்துக்கு 42 ஆவது திருத்தம் வந்த போது, ஆட்சிமொழி தொடர்பாக இந்தி பேசாத மக்களுக்கு நேருவும் மற்றத்தலைவர்களும் கொடுத்த வாக்குறுதியை அரசியல் சட்டத்திலேயே சேர்த்துவிடவேண்டும்’’ என்ற ஒரு குரலும் எழுந்தது. அப்படியானல், இந்தி பேசாத மக்கள் விரும்பி ஏற்காத முன்பே அவர்களின் மீது இந்திமொழி திணிக்கப்படக் கூடும் என்கிற ஓர் அச்சம் இன்னமும் இருந்து வருகிறது என்பதுதானே பொருள்?

பாவேந்தரின்
"அழகின் சிரிப்பு"
ஓர் அறிமுகம்.

இராம. சுப்பிரமணியன், M.A., B.L, B. Lib. B.SC.,
4-B, தீத்தாரப்ப முதலி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை-600005.

—o—

முன்னுரை :

இயற்கை அனைத்தும் அழகே, அந்த அழகு, செந்தாமரை என்றும், நிலவென்றும், கதிரென்றும் சிரித்தது.

இயற்கை அழகிலும், மக்கள் உள்ளத்திலும் கவிஞர் இரண்டறக் கலந்து, துருவித் துருவிச் சித்திரம் தீட்டிக் காட்டுகிறார். ஒவ்வோர் இயற்கைக் காட்சியின் சிரிப்பும்-குறும்பும் நம்மை அப்படியே சிலிர்க்க-சிரிக்க வைக்கின்றன.

இயற்கைப் பொருள் ஒவ்வொன்றும் பத்து அறுசீர் விருத்தங்களால்-எளிய நடையில் சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

முன்பக்கத் தொடர்சி

இந்திப் பகுதிகளில் தென்னிந்திய மொழிப் பயிற்சிக்கு அக்கறை இல்லாதிருப்பதையும் இந்தி பேசாத பகுதிகளில் இந்தியைப் பற்றிய அச்சம் அணையாமல் இருந்து வருவதையும் பார்க்கையில், — ஆட்சிமொழி பற்றிய முடிவும் அது தொடர்பாக நாம் மேற்கொண்டு வந்துள்ள நடைமுறைகளும் அந்த பிரச்சினையைத் தீர்த்து வைக்கவில்லை என்ற முடிவுக்கே நாம் வரவேண்டியுள்ளது. எனவே, ஆட்சிமொழிப் பிரச்சினையை முற்றிலும் புதியதொரு கோணத்தில் அணுகி, அதற்குப் புதிய தீர்வு காண முயல்வதே நல்லது. நமக்கு புதிய அனுபவங்கள் ஏற்படும்போது, சரியில்லாதவைகளாகவோ தலைவலி கொடுப்பவைகளாகவோ தோன்றுகிற நமது பழைய முடிவுகளை, மிகுந்த கவனத்தோடு மறுபரிசீலனை செய்வதே அறிவுடைமை.

—oo✻oo—

அழகு

" அழகின் சிரிப்பில் " கவிஞர் பதினறு தனிப் பொருள்களைப் பாடியிருக்கிருர். அதில் அழகும் அடங்கி இருக்கின்றது. அழகினைக் கவிஞர் மூன்று பாடல்களில் பாடுகின்ருர். அழகு எங்கும் நீக்கமற நிறைந்திருப்பதை உணர்த்துகின்ருர் கவிஞர்,

காக்கைச் சிறகினிலே நந்தலாலா — நின்றன்
கரிய நிறந் தோன்று தையே நந்தலாலா,
பார்க்கு மரங்களெல்லாம் நந்தலாலா — நின்றன்
பச்சைநிறந் தோன்று தையே நந்தலாலா.
கேட்கு மொலியிலெல்லாம் நந்தலாலா — நின்றன்
கீத மிசைக்குதடா நந்தலாலா,
தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா – நின்னைத்
தீண்டு மின்பந் தோன்றுதடா நந்தலாலா. [1]

என்று தேசீயக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் பாடினர். அது போல அழகு என்பது சிறு குழந்தையின் விழியின் ஒளியிலும், பூச்சூடும் பெண்ணின் நலினம் நிறைந்த விரல் நுனியிலும், கலப் பையுடன் புறத்தினிலே செல்லும் உழவனின் புதுநடையிலும், அந்த அழகு களிநடம் புரிகின்றது. அசையும் பொருள்; அசை யாப் பொருள்; உயிர் உள்ள பொருள்; உயிரில்லாப் பொருளிலும், இந்த அண்டம் முழுவதிலும் இந்த அழகு உள்ளது, அவளே அவருக்குக் கவிதை தந்தாள்.

.... விளைந்த நன்செய்
நிறத்தினிலே என் விழியை நிறுத்தினள்; என்
நெஞ்சத்தில் குடியேறி மகிழ்ச்சி செய்தாள் [2]

அக்கவிதைமகள் என்றும் சிரஞ்சீவியாக இருக்கின்ருள். பழமையினல் அவள் சாகவில்லை; என்றும் இளையவளாகவே இருக்கின்ருள்.

பசையுள்ள பொருளிலெலாம் பசையவள் காண் !
பழமையினல் சாகாத இளையவள் காண் ! [3]

— என்று கவிஞர் பாடுமிடத்தில் அழகை தெய்வ நிலைக்கே உயர்த்தி விடுகின்ருர்.

---

1 பாரதியார் கவிதைகள், மெர்க்குறி புத்தகக் கம்பெனி, கோயமுத்தூர். 1969 பக்·

2 பாரதிதாசன் அழகின் சிரிப்பு, பதி. 5. பாரி நிலையம், சென்னை 1954 பக். 5

3 மே. கா. நூ. பசி. 5

கடல்

கடல் அலைகள் பொங்கிப் புரண்டு எழுந்து எழுந்து விழுந்து விழுந்து புரண்டு செல்வதினைக் கல்வி நிலையத்தின் எழுச்சிகளுக்கும் வீழ்ச்சிக்கும் ஒப்பிட்டுப்பேசுகின்றார் கவிஞர்.

நேரிடும் அலையோ, கல்வி
நிலையத்தின் இளைஞர் போலப்
பூரிப்பால் ஏறும்; வீழும்
புரண்டிடும்; பாராய் தம்பி [4]

தென்றல்

கவிஞரின் தென்றலைப் படிக்கும்போது 'இமயமும்' துளக்கும் பண்பினை' என்ற குறுந்தொகைப் பாடல்தான் நினைவுக்கு வருகின்றது.

திண்குன்றைத் தூள் தூளாகச்
செய்யினும் செய்வாய்; நீஓர்
துண்துளி அனிச்சம் பூவும்
நோகாது நுழைந்தும் செல்வாய்! [5]

கவிஞரின் தென்றலை, இயற்கையில் உற்றுநோக்கி உணரும் மெய்யுணர்ச்சியுடன் ஈடுபட்டால் மட்டும் உணரக் கூடியதாகும்.

உன்னிடம் அமைந் திருக்கும்
உண்மையின் விரிவில், மக்கள்
சின்னதோர் பகுதி யேனும்
தெரிந்தார்கள் இல்லை; [6]

தென்றலின் இன்பம் தென்னாட்டு மக்களின் பொதுச் சொத்து; அது இந்நாட்டின் தனிச்சிறப்பு.

தென்னாடு பெற்ற செல்வத்
தென்றலே உன்இன் பத்தைத்
தென்னாட்டுக் கல்லால் வேறே
எந்நாட்டில் தெரியச் செய்தாய்?

என்று குறிப்பிடுகின்றார். [7]

---

4 மே. கா. நூ. பக். 6
5 மே. கா. நூ. பக். 10
6 மே. கா. நூ. பக். 10
7 மே. கா. நூ. பக். 10

தென்றலின் அசைவைப் பார்த்து அதனை உணருகின்றோம். அன்னையைக் கண்டாலும் அவள் அன்பினைக் கண்ணால் காண முடியாததுபோல்தான் தென்றலின் அன்பைப் புரிந்து கொண்டும் அதனை பார்க்க இயலுவதில்லை.

உன்அரும் உருவம் காணேன்
ஆயினும் உன்றன் ஒவ்வோர்
சின்னநல் அசைவும் என்னைச்
சிலிர்த்திடச் செய்யும்! பெற்ற
அன்னையைக் கண்டோர், அன்னை
அன்பினைக் கண்ணிற் காணார்,
என்னினும் உயிர்க் கூட்டத்தை
இணைத்திடல் அன்பே அன்றோ? [8]

தென்றலின் குறும்பும் எப்படி என்பதற்குக் கவிஞர் அழகும் உண்மையும் நிறைந்த சான்றினைக் கொடுக்கின்றார்.

....பெண்கள்
விலக்காத உடையை நீபோய்
விலக்கினும், விலக்கார் உன்னை! [9]

என்ற வரிகளிலே கூறுகின்றார்.

காடு

புரட்சிக் கவிஞர் மக்களின் பேச்சு வழக்கினை மதித்து, செறிவான கருத்துக்கள் அடங்கிய அருந்தமிழை—இயற்சொல்லை—மலை, இருளில் மறைந்திருப்பதற்கு உவமையாக்கினார்.

....வேடன்
வகைப்பட்ட பரத்து வாசன்
என்பதை வலியன் என்றான்;
சகோ ரத்தைச் செம்போத் தென்றான்!
தமிழா நீ வாழ்க என்றேன் [10]

நாட்டின் வளத்திற்கும், நலத்திற்கும் பயன்பல விளைக்கும் காட்டினைக் கவிஞர்

பயன்தந்து நிற்கும் காடே! [11]

---

8. மே. கா. நூ. பக். 11
9. மே. கா. நூ. பக். 11
10. மே. கா. நூ. பக். 15
11. மே. கா. நூ. பக். 17

என்ற வரியில் சிறப்பித்துக் கூறுகின்றார்.

குன்றம்

எழில் நிறைந்த குன்றத்தில் இருள் பரவுமாறு, தன் ஒளியைக் கூட்டி அள்ளிக்கொண்டு மறைந்தான் கதிரவன். பிரியும் கதிரவனை தலைவனாகவும், இருளும் குன்றத்தைத் தலைவியாகவும் காணுகின்றார் கவிஞர்,

மறைகின்றான் பரிதி; குன்ற
மங்கையோ ஒளியி ழந்து,
நிறைமூங்கில் இளங்கை நீட்டி
வாராயோ எனஅ ழைப்பாள்! [12]

எழில் பெற்ற குன்றத்தினை ஏற்றமுற வருணிக்கிறார் கவிஞர்.

நீலமுக் காட்டுக் காரி
நிலாப்பெண்ணாள், வற்றக் காய்ந்த
பாலிலே உறைமோர் ஊற்றிய
பருமத்தால் கடைந்து, பானை
மேலுற்ற வெண்ணெய் அள்ளிக்
குன்றின்மேல் வீசி விட்டாள்!
ஏலுமட் டுந்தோ ழாநீ
எடுத்துண்பாய் எழிலை எல்லாம்! [13]

ஆறு

புதுவெள்ளம் ஆற்றில் பொங்கி வருகின்றது. இதனைக் கண்ட சிறுவர்கள் மகிழ்கிறார்கள்; மகிழ்ச்சிச் செய்தியைப் பெரியோர்களுக்கும் சொல்லத் துடிக்கின்றார்கள். வரும் புதுவெள்ளக் காட்சியை விட்டு ஓடாமல் அங்கேயே நிற்கிறார்கள். கால்கள் போகாத இடத்துக்குக் குரல் போகிறது.

சிறுவர்கள் செங்கை காட்டிப்
பெரியோரைக் கூவு கின்றார்
பேச்சொன்றே ஒலியோ நீளம்! [14]

---

12. மே. கா. நா. பக். 20
13. மே. கா. நா. பக். 21
14. மே. கா. நா. பக். 24

''ஆற்று வெள்ளத்தைக் காண சிற்றூரார் அங்கு வந்தார்'' எனத் தொடங்கும் பாட்டின் அடிகளில் ஆற்றின் செய்திகள் கூறப்படுகின்றன.

ஆற்றுவெள் ளத்தைக் காணச்
சிற்றூரார் அங்கு வந்தார்!
போற்றினர் புதுவெள் ளத்தைப்!
புகன்றனர் வாழ்த்து ரைகள்!
காற்றுகப் பறந்து சென்று
கழனிகள் மடைதி றந்து
மாற்றினர் வாய்க்கால்! மற்றும்
வடிகாலை மறித்தார் நன்றே! [15]

வையம் தழைக்க சிலம்படி குலுங்கச் செல்லுகின்றாள் ஆற்றுத் தாய்,

சிலம்படி குலுங்க ஆற்றுத்
தாய்நடக் கின்றாள் வையம்
தழைகவே தழைக என்றே! [16]

செந்தாமரை

செந்தாமரை மலர்களின் கூட்டம் விண்ணைப்போல் விரிந்தும், பசுமைக் காடாகியும் விளங்குகின்ற சிறந்த இயற்கை எழிலைக் காட்டுகின்றார் கவிஞர்.

மண்ணுளார் மகிழும் செந்தா
மரைமலர்க் காடு, நெஞ்சைக்
கண்ணுளே வைக்கச் சொல்லிக்
கவிதையைக் காணச் சொல்லும். [17]

தாமரையின் சிற்றரும்புக்கு உவமையாகக் கரும்பாம்புத் தலையினைக் காட்டுகின்ற கவிஞர் கருத்து சங்க இலக்கியப் பயிற்சி பின்புலம் தந்துள்ளது.

செழித்துத் திரண்டு வளர்ந்த கரும்பின் அரும்பு, சூல் முதிர்ந்த பச்சைப் பாம்புபோல் தோன்றுகிறது.

---

15. மே. கா. நூ. பக், 25
16. மே. கா. நூ. பக் 25
17. மே. கா. நூ. பக். 27

சினைப்பசும் பாம்பின் சூல்முதிர்ப்பு அன்ன
கனைத்த கரும்பின் கூம்புபொதி.[18]

தமிழ் இலக்கியப் புலமை மிகுதியும் பயிற்சி பெற்ற கவிஞர்

..................................கரிய பாம்பின்
தலைகள்போல் நிமிர்ந் திருந்த
தாமரைச் சிற்ற ரும்பும்
இலகுதல் காணப் பெற்றேன்;[19]

என்று குறிப்பிடுகின்றார்.

ஞாயிறு

ஞாயிறு கிழக்கில் கதிர் விரித்து எழுகிறது. எழுகின்ற கதிர் கவிஞருக்குச் சிங்க ஏற்றினை நினைவுபடுத்துகின்றது,

பொங்கியும் பொலிந்தும் நீண்ட
புதுப்பிடர் மயிர்சி லிர்க்கும்
சிங்கமே ![20]

ஆதவனின் ஒளி இல்லையேல் வாழ்வு இல்லை என் கவிஞர்

வாழும் நின் ஒளிதான் இன்றேல்
வானிலே உடுக்கள் எல்லாம்
தாழங்காய், கடுக்காய் கள்போல்
தழைவின்றி அழகி ழக்கும்![21]

என்று கூறுகின்றார்.

வையத்தின் இருளினை ஒதுக்கித் தள்ளுகின்ற ஞாயிற்றினை வாழ்த்துகின்றார் கவிஞர்.

வான்

வானவில் கண்ணுக்கு இனிய காட்சியாக மலைமேல் வளைந்து தோன்றுகிறது. அவ்வாறு திருக்கோலம் இட்டுத் தொடங்கும் மழையின் பயனாக மண்ணுலகம் முற்றும் கவின் பெறுகிறது.

---

18. குறுந். 35. கழார்க்கீரனெயிற்றியார்
19. அழகின் சிரிப்பு பக். 26
20. மே. கா. நா. பக். 31
21. மே. கா. நா. பக். 33

மேகம் பகலவன்மேல் போர் தொடுத்தன. கடலிலிருந்து நீரை எடுத்து வந்து தாழ்ந்து பெருமழையாய்த் திசை எல்லாம் மறையு மாறு பெய்கிறது. பெரிய நிலப்பரப்பு அழகுபெற்று இன்பம் எய்துகிறது.

கவிஞரின் கண்ணுக்கு மேகங்களின் மழைக்கோலம் போர்க் கோலமாய்த் தோற்றம் அளிக்கிறது. கவிஞரின் பாட்டின் வேகத் தில் கருமுகில்கள் திரண்டு, வானவில் விரிந்து, மின்னல் எடுத்து, மழைபொழியும் காட்சி சிறப்பாக அமைந்திருக்கின்றது.

பகல்வான்மேல் கருமு கில்கள்
படைஎடுத் தன! வில்லோடு
துகளற்ற வாளும், மேலும்
சுழன்றன மின்னி மின்னி!
நகைத்தது கலக லவென்று
நல்ல கார்முகில்தான்! வெற்றி
அகத்துற்ற இயற்கைப் பெண்ணுள்
இறைத்தாள்பூ மழையை அள்ளி! [22]

காலையில் கிழக்கிலும் மாலையில் மேற்கிலும் ஆதவனின் கதிர் எழுவதும் விழுவதும் புரட்சிக் கவிஞரின் கற்பனையில் கீழ்வருமாறு வெளியாகின்றது.

கிழக்குப்பெண் விட்டெ றிந்த
கிளிச்சிறைப் பரிதிப் பந்து
செழித்தமேற் றிசைவா னத்தின்
செம்பருத் திப்பூங் காவில்
விழுந்தது.! [23]

ஆல்

ஆலமரக் கிளையில் தொங்கிய பாம்பை விழுதென்று தவருக நினைத்துக்கொண்டு தொட்டுவிட்டுமருண்ட குரங்கைப் படம் பிடித் துக் காட்டுகின்ருர் கவிஞர்.

ஆலமரத்தில் பல விழுதுகள் தொங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றுடன் ஒரு பாம்பும் தொங்கிக் கொண்டிருக்கிறது. விழுதைப் பிடிப்பதற்கு மாருக விழுதுபோல் காட்சியளிக்கும் பாம்பைத் தொடு

---

22. மே: கா. நூ. பக். 36
23. மே. கா. நூ. பக். 35

கின்றது குரங்கு. தொட்டவுடன் சுடர்விட்டு எரியும் விளக்கைத் தொட்ட சிறு குழந்தையைப்போல் வெடுக்கென்று குதிக்கின்றது. கீழேயுள்ள விழுதுகள் எல்லாம் பாம்புகளாகத் தோன்றுகின்றன. உச்சி மரத்துக்குப் போய்விட்டது. இறுதியாகத் தன் வாலைப் பார்க் கிறது. இதுவும் பாம்போ என்று நினைக்கின்றது.

கிளையினிற் பாம்பு தொங்க,
விழுதென்று, குரங்கு தொட்டு
''விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்த தைப்போல்''
கிளைதோறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும். [24]

ஆலமரத்தின்மேல் காற்று மோதுகின்றது. அடிமரம் அசைய வில்லை; கிளைகள் அசைகின்றன; அது பறவைகளுக்குத் தாலாட்டு போல் இருக்கிறதாம்! பறவைகள் காற்றுக்கு நன்றி கூறுகின்றன.

ஆலினைக் காற்று மோதும்;
அசைவேனே எனச்சி ரித்துக்
கோலத்துக் கிளைகு லுங்க
அடிமரக் குன்று நிற்கும்!
தாலாட்ட ஆளில் லாமல்
தவித்திட்ட கிளைப்புள் ளெல்லாம்
கால்வைத்த கிளைகள் ஆடக்
காற்றுக்கு நன்றி கூறும்! [25]

புறாக்கள்

புறாக்களின் வாழ்வினைப் படம் பிரித்துக் காட்டுகின்றார் கவிஞர். கூட்டினைத் திறந்தபின் அவைகள் கீழிறங்கும் காட்சி பூங்கொடியிலி ருந்து பொல பொலவெனப் பூக்கள் சரிந்து வீழ்வதுபோல் உள்ள தாகக் கூறுகின்றார்

கோட்டுப்பூப் போற்பு றாக்கள்
குதித்தன கூட்டி னின்றே! [26]

---

24. மே. கா. நா. பக். 40
25. மே. கா. நா. பக். 41

புருக்களின் வாழ்வில் ஒத்துண்ணல் உண்டு. அவைகள் கூடி இரையுண்ணும். அவைகளின் வாழ்வில் வெட்டில்லை, குத்துமில்லை.

வட்டமாய்ப் புருக்கள் கூடி
இரையுண்ணும்; அவற்றின் வாழ்வில்
வெட்டில்லை; குத்து மில்லை;
வேறுவே றிருந்த ருந்தும்
கட்டில்லை; கீழ்மேல் என்னும்
கண்மூடி வழக்க மில்லை. [27]

என்று கூறுகின்றார் புரட்சிக் கவிஞர்.

புருக்களின் அக வாழ்வின் ஒழுக்கத்தினைக் கூறுமுகத்தான் மனித சமுதாயத்தின் களைகளுக்கு மாற்றுக் கூறுகின்றார் கவிஞர்.

ஒருபெட்டை தன்ஆண் அன்றி
வேறொன்றுக் குடன் படாதாம்;
ஒருபெட்டை மத்தாப் பைப்போல்
ஒளிபுரிந் திட நின்றாலும
திரும்பியும் பார்ப்ப தில்லை
வேறொரு சேவல்! தம்மில்
ஒருபுரு இறந்திட்டால் தான்
ஒன்றுமற் றொன்றை நாடும்! [28]

புருக்கள் மனிதர்களுக்குப் பாடம் புகட்டுவதையும்; தாய் தந்தையன்புடன் வாழ்வதையும் எடுத்துக் காட்டுகின்றார் பாவேந்தர்.

வெளியில் கூட்டமாய்ப் பறந்து சென்ற புருக்கள் திரும்பிக் கூட்டினில் வந்தடைவதைக் கவிஞர்

கூட்டமாய்ப் பறந்து போகும்,
சுழற்றிய கூர்வாள் போலே!
கூட்டினில் அடையும் வந்தே
கொத்தடி மைகள் போலே! [29]

என்று கூறுவது சிந்திப்பதற்கு உரியதாகும்.

---

26. மே. கா. நூ. பக். 42
27. மே. கா. நூ. பக். 43
28. மே. கா. நூ. பக். 43
கூறுகின்றார் கவிஞர்.
29. மே. கா. நூ. பக். 45

கிளி

நீல நிறமான வானத்தில் அடிமுடி தெரியாமல் விழுந்த வான வில்லைப்போல் கிளியின் பச்சைக் கழுத்தில் வளையமாகவரும் சிவந்த வட்டக் கோட்டை ஒப்பிடுகின்றார் கவிஞர்.

நீலவான் தன்னைச் சுற்றும்
நெடிதனை வான வில்லைப்
போலநின் கழுத்தில் ஓடும்
பொன்வரி மின் விரிக்கும் [30]

இருள்

வாடிய உயிர்களை அணைக்கின்ற அன்பின் முழக்கமான இருளுக்கு நன்றி கூறுகின்றார் பாரதிதாசன்.

.... அன்பின்
முழக்கமே, உனக்கு நன்றி! [31]

இருள் அடிக்கடித் தன்னுடைய உடையினை மாற்றிக் கொள்கிறது. பகலில் தங்கச் சேலை அணிந்து இருக்கிறது. இரவில் வேலைப்பாடு அமைந்த வெண்பட்டு அணிந்து இருக்சிறது.

பகல்உடை தங்கச் சேலை!
வெண்பட்டில் இராச் சேலைமேல்
வேலைப்பா டென்ன சொல்வேன்! [32]

இருளின் பிறப்பினைப் பற்றி அறிவியல் முறையில் விளக்சி கூறுகின்றார் கவிஞர்.

வானொடு நீவி றந்தாய்!
மறுபடி. கடலில் தோன்றும்
மீன்என உயிர் உடல்கள்
விளைந்தன! எவ்வி டத்தும்
நீநிறை வுற்றாய்! எங்கும்,
பொருளுண்டேல் நிழலுண்டன்றோ!

---

30. மே. கா. நா. பக். 46
31. மே. கா. நா. பக். 50
32. மே. கா. நா. பக். 50

பானையில் இருப்பாய்; பாலின்
அணுத்தோறும் பரந்தி ருப்பாய்! [33]

அறிவு என்றால் ஒளி; அது அறியாமை என்னும் இருளைப் போக்கும்; அறிவைச் செய்யும்.

அறிவென்றால் ஒளியாம். ஆம் ஆம்!
அறியாமை இருளாம். ஆம் ஆம்!
அறியாமை அறிவைச் செய்யும்
அறியாமை அறிவால் உண்டோ? [34]

சிற்றூர்

சிற்றூர் மக்களின் வாழ்க்கையினைப் படம் பிடித்துக் காட்டுகின்றார். சிற்றூரில் வாழும் மக்கள் ''செய்யும் தொழிலே தெய்வம்'' என்பதைப் பொன்னேபோல் போற்றிச் செயலாற்றி வாழ்ந்தனர் என்பதை

சிற்றேடு கையில் ஏந்தி
ஒருகாணிப் பருத்தி தேற்ற
ஒற்றைஆள் நீர்இ றைத்தான்,
உழைப்பொன்றே செல்வம் என்பான். [35]

என்ற வரிகளினால் புலப்படுத்துகின்றார்.

சிற்றூரின் சிறப்பை யெல்லாம் கவிஞர் சிறப்புற எடுத்துக் கூறுகின்றார். கிராமச் சூழ்நிலையினை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றார்.

சேரிக்குப் பெரிது சிற்றூர்
தென்னை மா சூழ்ந்திருக்கும்;
தேர்ஒன்று, கோயில் ஒன்று
சேர்ந்தஓர் வீதி, ஒட்டுக்
கூரைகள், கூண்டு வண்டி,
கொட்டில்சேர் வீதீ ஐந்தே;
ஊர்இது; நாட்டார்க் கெல்லாம்
உயிர்தரும் உணவின் ஊற்று. [36]

---

34. அழகின் சிரிப்பு பக். 53
35. மே. கா. நூ. பக். 55
36. மே. கா. நூ. பக். 57

பட்டணம்

பட்டணத்தில் வாழுகின்ற மக்கள் இயற்கைத் தாயின் உயிரினங்களில் மனிதனே எல்லாவற்றிலும் உயர்ந்தவன் என்பதையும், தான் பகுத்தறிந்து கண்ட உண்மையை உலகுக்கு வெளிப்படுத்தும் முயற்சியும், தொடர்ந்து முன்னேற்றச் செயல்களைச் செய்யும் பயிற்சியும் உடையவர்கள் என்பதை

இயற்கையிவ் உயிர்கட் குள்ளே
மனிதன் தான் எவற்றினுக்கும்
உயர்ச்சியும், தான் அறிந்த
உண்மையை உலகுக் காக்கும்
முயற்சியும், இடைவி டாமல்
முன்னேற்றச் செயலைச் செய்யும்
பயிற்சியும் உடையான் என்று
பட்டணம் எடுத்துக் காட்டும்.[37]

என்ற வரிகளில் கூறுகின்றார்.

இயற்கையின் இருப்பிடம் சிற்றூர் என்றும் செயற்கையின் கொள்ளிடம் பட்டணம் என்றும் முயற்சியும் உடல் உழைப்பும் மிகுதியாக உடைய மக்களைச் சிற்றூரில் காண்பதாகவும்பல் தொழில் பயிற்சியையும் கலையுணர்வையும் பட்டணத்தில் காண்பதாகவும் ஆசிரியர் கூறுகின்றார்,

இயற்கையின் எழிலை யெல்லாம்
சிற்றூரில் காண ஏலும்!
செயற்கையின் அழகை யெல்லாம்
பட்டணம் தெரியக் காட்டும்!
முயற்சியும் முழுது ழைப்பும்
சிற்றூரில் காணு கின்றேன்;
பயிற்சியும் கலையு ணர்வும்
பட்டணத் திற்பார்க் கின்றேன்![38]

என்ற அடிகளில் காணலாம்.

---

37. மே. கா. நூ. பக். 58
38. மே. கா. நூ. பக். 60

தமிழ்

இயற்கையுடன் இயற்கையாக இயைந்து வளர்ந்தது தமிழ் மட்டுமில்லை; இசையும் கூத்துமாகும். அதனைக் கவிஞர்

பறவைகள் விலங்கு, வண்டு,
தழைமூங்கில் இசைத்ததைத் தாம்
தழுவியே இசைத்த தாலே
எழும்இசைத் தமிழே! இன்பம்
எய்தியே குதித்த தாலே
விழியுண்ணப் பிறந்த கூத்துத்
தமிழே. [39]

என்று கூறுகின்றார்.

கவிஞர் தமிழினைத் தம் இனிய உயிராக எண்ணுகின்றார். அதனை

தமிழேநீ என்றன் ஆவி! [40]

என்று குறிப்பிடுகின்றார்.

என்றும் இளமை குன்றாமல் வாழ்ந்துவரும் தமிழினையும், அதன் வழிவந்த கலைகளையும் சிறப்பித்துக் கூறுகின்றார் கவிஞர்.

வட இந்தியாவில் ஆரியர் குடியேறிய பின்னர்தான், அவர்கள் பின் தென்னாடு வந்து குடியேறிய வரலாற்றினைக் கவிஞர்

வடக்கினில் தமிழர் வாழ்வை
வதக்கிப், பின்தெற்கில் வந்தே
இடக்கினைச் செயநி னைத்த
எதிரியை, அந்நாள் தொட்டே
''அடக்கடா'' என்று ரைத்த
அறங்காக்கும் தமிழே! இங்குத்
தடைக்கற்கள்உண் டென் றாலும்
தடந்தோளுண் டெனச் சிரித்தாய்! [41]

என்று கூறுகின்றார்.

---

39. மே: கா. நூ. பக். 61
40. மே. கா. நூ. பக். 62
41. மே. கா. நூ. பக். 63

தமிழே, தீயவர்கள் உன் நலனைச் சிதைக்க முயன்றார்கள்; ஆனால் நீ நடுங்கவில்லை!

"வாளினை எடுங்கள் சாதி
மதம்இல்லை தமிழர் பெற்ற
காளைகாள்" என்றாய்; காதில்
கடல்முழக் கத்தைக் கேட்பாய்![42]

என்று கவிஞர் கூறும்பொழுது, அவருடைய தமிழ் இதய முழக்கத்தின் எதிரொலியையே கேட்கிறோம்!

கன்னற் பொருள் தரும் தமிழே நீ ஓர் பூக்காடு; நானோர் தும்பி என்று தம்மைக் "கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பியாக"க் கூறிக் கொள்கிறார்.

பொருள் தரும் தமிழே நீஓர் கன்னற்
பூக்காடு; நானோர் தும்பி![43]

முடிவுரை :

"அழகின் கோலத்தைப் பழமை, புதுமை என இருபுறத்திலும் பார்க்கும்போது அன்றைய அழகு இலக்கியப் பின்னணியாக விளங்கிற்று. இன்றைய அழகோ பாரதிதாசனின் கையில் புதுப் புது ஆற்றல் பெற்றது. காணக்கிடைக்காத உவமை மணிகள் புத்தொளி வீசின. பிரெஞ்சு ஓவிய வண்ணங்கள் கலந்தன. மனித வாழ்வின் சீர்மைக்கு முற்போக்கு முதற் குரல் எழுந்தது. மேல், கீழ் என்ற வேற்றுமை நீங்க அழகு அடி எடுத்து வைத்தது. மனித இனத்தில் உழைப்பாளர் உயரத் தமிழ்ச் சிரிப்பு சிரித்தது. ஆம், அதுவே புரட்சிக் கவிஞர் கண்ட **அழகின் சிரிப்பு**"[44] என்று டாக்டர் தா. வே. வீராசாமி அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

---

42. மே. கா. நூ. பக். 64
43. மே. கா. நூ. பக். 64
44. டாக்டர் தா. வே. வீராசாமி, பட்டறையிலே பாரததாசன், பக். 120

துணை நூற்கள்

1 வரதராசன் (மு) குறுந்தொகைச் செல்வம், பாரி நிலையம், சென்னை 1955

2 வரதராசன் (மு) நெடுந்தொகைச் செல்வம், பாரி நிலையம், சென்னை 1954

3 வீராசாமி (தா. வே.) பட்டறையிலே பாரதிதாசன் மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோயமுத்தூர் 1971

4 சாலை இளந்திரையன் புரட்சிக் கவிஞர் கவிதை வளம், பாரி நிலையம், சென்னை 1965

5 மின்னூர் சீனிவாசன் மறுமலர்ச்சிக் கவிதை ஆய்வு, மின்னூர் வெளியீடு, சென்னை 1976

6 அறிவொளி (அ) பாரதிதாசனில் புதிய பார்வை சோழன் பதிப்பகம், முத்துப்பேட்டை 1975

7 சுப்பிரமணியன் (இராம) புரட்சிக்கவி உள்ளம், மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோயமுத்தூர் 1975

8 பாரதியார் கவிதைகள் மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோயமுத்தூர் 1969

9 பாலசுப்பிரமணியன் (சி) வாழையடி வாழை பதி. 3 பாரி நிலையம், சென்னை 1972

10 தண்டாயுதம் (இரா.) தற்காலத் தமிழ் இலக்கியம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை 1973

11 பாரதிதாசன் **அழகின் சிரிப்பு** செந்தமிழ் நிலையம், பதி. 5 இராமச்சந்திரபுரம் 1954

தமிழ் எழுத்துக்களும்

தேவநாகரி எழுத்துக்களும்

— ந. மு. கோவிந்தராய நாட்டார், பி.ஏ., எல்.டி., அவர்கள்.

இந்தி மொழியை நம் நாட்டின் பொதுமொழியாக்க முயற்சி செய்கின்ற அரசினர் அம்மொழி எழுதப்படுகின்ற தேவநாகரி எழுத்துருவை இந்திய மொழிகளுக்குப் பொதுவெழுத்தாக்க முயற்சி செய்வது இயற்கையேயாகும். இதில் யாதொரு வியப்பிற்கும் இடமில்லை. ஏனெனில் இஃது இந்தியை பொதுமொழியாக்குவதற்கு இன்றியமையாததொரு படியாகும். எனினும் தமிழ்மொழியைப் பொறுத்தமட்டில் இம்முயற்சி வெற்றிபெருதெனத் திண்ணமாகக் கூறலாம். தேவநாகரியில் சற்றுக்குறைய 500 குறியீடுகள் இருந்தும் **தமிழ் சிறப்பெழுத்துக்களாகிய எ, ஒ, ள், ஃ. ழ், ற், ன் ஆகிய எழுத்துக்களுக்கும் எகர ஒகரங்கள் ஏறிய உயிர்மெய்யெழுத்துக்களுக்கும் வேண்டிய குறியீடுகள் அம்மொழியில் இல்லை.** இவற்றை எழுத வேண்டுமானால் தேவநாகரியில் புதிய குறியீடுகள் உண்டாக்கல் வேண்டும். புதிய குறியீடில்லாமல் 'தமிழ்' என்ற சொல்லையே அம்மொழியில் எழுதவியலாதே! புதிய குறியீடுகளை உண்டாக்கினால் குழப்பம் மிகுந்த தேவநாகிரி எழுத்தில் மேலும் குழப்பம் ஏற்படும். தமிழ் மொழிக்கோ மனதால் நினைக்கவும் முடியாத அளவிற்குப் பேரிடுக்கண் உண்டாகும். இதனை விளக்குமுன் இடைப்பிறவரலாக ஒன்றுகூற விரும்புகிறேன்.

தமிழ் எழுத்தொலி நூல் அல்லது உலகப் பொதுத்தமிழ் எழுத்தொலி என்னும் பெயரில் ஒரு நூலை 1953-இல் யான் வெளியிட்டேன். இதற்குமூலம் தொல்காப்பிய எழுத்ததிகாரமே. நூலின் தோற்றுவாயில் ''ஆகையின் தமிழ் எழுத்துக்களைக் கொண்டு பிற மொழியெழுத்துக்களை எழுதுதல் எளிதாகியுள்ளது. பிறமொழி எழுத்துக்களைக்கொண்டு தமிழை எழுதுதல் இயலாததாகின்றது'' எனக் கூறியுள்ளேன். நூலின் முடிவுரையில் ''நாகரி எழுத்துரு எளிமையுடையதன்று. ஒரே வருக்கத்திலுள்ள நந்நான்கு எழுத்துக்களுக்கும் வெவ்வேறு உருவம் அமைந்துள்ளது. பல கூட்டு உருவங்கள் உடையதாயும் கோட்டில் இன்றி எளிதில் எழுதமுடியாததாயும், கையை எடுத்தெடுத்து எழுதவேண்டிய எழுத்துக்கள்

உடையதாயுமுள்ளது. நமது பாரத அரசாங்கத்தார் தமிழ் எழுத்துருவையாவது மேற்கொண்டால் இந்திய மொழிகளையெல்லாம் ஒரே எழுத்துருவிற்காணலாம் எனக்கூறியுள்ளேன். தமிழ் எழுத்துக்களை தேவநாகரியில் எழுதுவதால் தமிழ்மொழிக்கு வரக்கூடிய கேடுகளைக் கூறுமுன் எழுத்துருவங்களின் வளர்ச்சியைப் பற்றிச் சிறிதுணர்வது இன்றியமையாததாகும்.

சீனமொழி நீங்கலாக உலகின் பலமொழிகளின் இன்றைய எழுத்துருவங்கள் எல்லாம் பல படிகளைத்தாண்டி வந்துள்ளவையாம். இவை முறையே, உருவெழுத்து, உணர்வெழுத்து, உருவும் உணர்வும் கலந்த எழுத்து, தன்மையெழுத்து, ஒலியெழுத்து என்பனவாம் இவை ஆங்கிலத்தில் முறையே, (Pictographs, Ideographs, Hieroglyphs, Syllabaries, Phonetic letters) எனப்பெறும். ஒலியெழுத்தே இப்பொழுதுள்ள மொழிகளில் எல்லாம் காணப்படுகின்ற உருவாகும். கற்களிலும், தோலிலும், முத்திரைகளிலும், காணப்படுகின்ற எழுத்துருவங்களை ஆராய்ந்து இவ்வாறு மேல்நாட்டு ஆராய்ச்சியாளர் பல படிகளுக்கும் பெயர் கொடுத்துள்ளனர் ஆனால் இவ்வெழுத்துருவ வகைகளைப்பற்றியும், இராசியெழுத்து, நாளெழுத்து, கண்ணெழுத்து, கரந்தெழுத்து ஆகிய பிற எழுத்து வகைகளைப் பற்றியும் தமிழ் இலக்கிய இலக்கணங்களில்மாத்திரம் வரலாறுகள் காணப்படுகின்றன. ஏனைய மொழி இலக்கியங்களில் இவை காணப்படவில்லை. இது பெருவியப்பிற்குரிய செய்தியன்றோ! எடுத்துக்காட்டாக இரண்டொன்று கூறுவம்.

யாப்பருங்கல விருத்தியுரையில் காணப்பட்டவுருவமெல்லாம் மாணக்காட்டும் வகைமை நாடி வழுவிலோவியன் கைவினைபோல எழுதப்படுவதுருவெழுத்தாகும் என உருவெழுத்திற்கு இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

> ''கொண்டவோர் குறியாற் கொண்ட வதனை
> உண்டென்றுணர்வதுணர் வெழுத்தாகும்''

என்னும் இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

தன்மையெழுத்திற்கு,

> ''முதற்காரணமும் துணைக்காரணமும்
> துணைக்காரணத்தோடு தொடரியவுணர்வும்
> அவற்றொடு புணர்ந்த வகத்தெழு வளியின்
> மிடற்றுப் பிறந்திசைப்பது தன்மையெழுத்தே''

என்னும் இலக்கணம் கூறப்பெற்றுள்ளது.

ஒலியெழுத்திற்கு,

" இசைப்படுபுள்ளி னெழாஅல்போலச்
செவிப்புல னுவதொலியெழுத்தாகும் "

என்னும் இலக்கணம் கூறப்பெற்றுள்ளது. ஆகலின் இத்தனைவகை எழுத்துக்களும் தமிழ்மொழியில் ஒரு காலத்தில் வழக்கில் இருந்த னவாகும். இவை மொகஞ்சதாரோ எழுத்துக்களின் தொடர்ச்சி யாக வளர்ந்தனவாகும். அண்மையில் காலஞ்சென்ற புதைபொருள் ஆராய்ச்சிவல்லுநர் ஈராசு பாதிரியார் மொகஞ்சதாரோ எழுத்துக் கள் தமிழ் எழுத்துக்களெனக் கூறியிருப்பது இவ்வுண்மையை வலியுறுத்தும்.

உலகில் முதன்முதல் ஒலியெழுத்தும் அதற்கு உருவமும் அமைந்தது தமிழ்மொழியிலேதான். இதற்குத் தொல்காப்பியம் சான்று பகர்கின்றது. தொல்காப்பியர் காலத்திற்குப் பல நூற்றாண் டுகள் முன்னரே இவ்வெழுத்துக்கள் உண்டாயிருத்தல் வேண்டும். வடமொழியின் ஆதிநூல்களாகிய வேதங்கள் எழுதாமறைகளாகிய நின்றமையாலும் பாணினீயம் எழுத்துக்குறியீடுகளைப்பற்றி ஒன்றும் கூறுமையானும் வடமொழியெழுத்துருவங்கள் அசோகன் காலத்திற்குச் சற்று முன்னரே தோன்றி வளர்ச்சியடைந்திருக்க வேண்டும். பாணினீயத்திற்கு முந்தியதாகிய தொல்காப்பியத்தில்

" அவைதாம் குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தமென்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோரன்ன "

" உட்பெறுபுள்ளி உருவாகும்மே "

" மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையில் "

" எகர ஒகரத் தியற்கையும் அற்றே "

" புள்ளியில்லா எல்லா மெய்யும்

உருவுரு வாகி அகரமோ டுயிர்த்தலும்
ஏனை உயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயீ ரியல உயர்த்த லாறே "

" அவற்றுள், மெய்யீறெல்லாம்
புள்ளியொடு நிலையில் "

" குற்றியலுகரமும் அற்றெனமொழி "

ஆகிய நூற்பாக்கள் உள்ளன. இவற்றை நுண்ணிதின் ஆராய் வாருக்கு உயிர், மெய், உயிர்மெய், ஆய்தம், குற்றியலிகரம், குற்றியலுகரம் ஆகிய 249 எழுத்துக்களும் தொல்காப்பியர் காலத் திற்கு முன்னரேயே வரிவடிவு பெற்றிருந்தன என்பது புலனாகும். தொல்காப்பியம் இலக்கணமாகலின் முந்திய இலக்கியங்களில்

வழக்காருயிருந்த வரி வடிவங்களைப் பற்றியே இவ்வாறு கூறி யிருந்தல் வேண்டும். மேலே காட்டப்பெற்ற ஏழாம் நூற்பா, **அற்றென மொழிப** எனக் கூறுதலைக் காண்க. இற்றை நாள் தமிழ் எழுத்துருவங்கள் சிறிய மாறுபாட்டுடன் கூடிய பழைய உருவங்களே. கல்லெழுத்துக்களில் காணப்படுகின்ற உருவங்கள் கல்லுளிக்கு எளிமை கருதிப் பொறிக்கப் பெற்ற உருவங்களாகும். பழைய ஓலையேடுகளிற் காணப்படுகின்ற உருவங்கள் பெரும்பாலும் இக்கால உருவங்களுடன் ஒத்தவையே. அச்சுப் பொறி வந்த பிறகு இவை சிறிது அழகு பெற்றன. மேலே காட்டப் பெற்ற மூன்ருவது நூற்பாவால் மெய்கள் புள்ளியுடன் கூடிய உருவங்கள் உடையன வென்பதும் (தேவநாகரி மெய்களுக்குப் புள்ளிகள் இல்லை) நான்காவது நூற்பாவால் எகரம், ஒகரம், ஆகிய உருவங்கள் உடையனவென்பதும் (புள்ளியில்லா இவ்வுயிர்கள் நெடிலைக் குறிப்பன. வீரமாமுனிவர் காலத்திலிருந்து இவை ஏ, ஓ என எழுதப்பட்டன. புள்ளியில்லா உருவங்கள் குறில்களாகக் கொள்ளப் பட்டன). ஐந்தாவது நூற்பாவால் மெய்கள் அகரத்துடன் கூடும் போது புள்ளி நீங்கிய உருவங்களே உருவாக உடையனவென்பதும் ஏனைய உயிர்களுடன் கூடும்போது பலவாறு திரிந்த உருவங்கள் உடையனவென்பதும் முதல் நூற்பாவால் குற்றியலிகரம் குற்றியலு கரம், ஆய்தம் ஆகிய மூன்றும் உருவங்கள் உடையனவென்பதும், அறியக்கிடக்கும் உண்மைகளாம். சார்பெழுத்தாகிய மூன்றின் ஒலியைப்பற்றியும் உருவங்களைப்பற்றியும் எமது **உலகப் பொதுத் தமிழ் எழுத்தொலி நூலில்** விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இனி தேவநாகரியில் தமிழ் எழுத்துக்களை எழுதுவதனுல் தமிழ்மொழிக்கு உண்டாகக்கூடிய பேரிடையூறுகளைப்பற்றிச் சுருக்கமாகக் கூறுவாம்.

விலை மதிக்கலாகாத அரும்பொருட்கருவூலமாம் தொல்காப்பி யத்தை அலைமோதும் ஆழ்கடலில் தூக்கியெறிய வேண்டியதுதான். அன்ருெருநாள் புலவனெருவன் ''வாரணம் கொண்டதந்தோ வழி வழிப்பெயரும் மாள'' எனக் கூறினன். இன்ரே நாகரி கொண்ட தந்தோ நமதிலக்கியப் பொருட்குவியலெல்லாம் எனக்கூற வேண் டியதுதான். மேலே காட்டிய நூற்பாக்களும், சொற்புணர் விதிக ளும், செய்யுள் விதிகளும் ஏனைய பல நுட்பவிதிகளும் தேவநாகரி எழுத்தில் எவ்வாறு காட்சியளிக்குமோ? யாவரறிவார்? உடல் மேல் உயிர்வந் தொன்றுவ தியல்பே என்பதுபோன்ற தத்துவ அடிப்படையிலுள்ள நூற்பாக்களின் கதி என்னுகும்?

தமிழ் இலக்கண விதிகளைப் பின்பற்றிய தமிழ் இலக்கியங் களின் நிலை என்னுகும்?

இற்றை ஞான்று தமிழ் எழுத்துருவில் உள்ள நூற்படிகளை யெல்லாம் என் செய்வது ?

தமிழ் நூற்களை அச்சியற்றிவந்துள்ள பொறிகளை என் செய்வது ?

வருங்காலத் தமிழ்மக்கள் தமிழ் எழுத்துருவுடன் இணைக்கப் பெற்ற தொல்காப்பியம் போன்ற நூற்களை எவ்வாறு கற்பாரோ ?

தமிழில் மெய்யெழுத்து மொழிமுதலில் வராது. வடமொழி, இந்தி ஆகிய மொழிகளில் மெய்யெழுத்து மொழி முதல் வரும். ஆகையின் தமிழை நாகரியில் எழுதினுல் இவ்விதியினுல் உண்டாகும் விபரீதங்கள் பலவாம்.

காலஞ்சென்ற தமிழ்ப்பேறிரனுர் பா. வே. மாணிக்க நாய்க்கர் அவர்கள் ' **தமிழ்நெடுங்கணக்கும் அதன் மந்திரப்பொருளும்** ' Tamil Alphabet and its Mystic Aspect என்றவொரு நூல் வெளியிட்டுள்ளார். இந்நூலில் தமிழ் எழுத்துக்களின் வரிவடிவ மாட்சியையும் அவற்றின் தத்துவ அடிப்படையையும் விளக்கியுள்ளார். அகர உருவில் 'ஓம்' என்னும் பிரணவம் அடங்கியுள்ளமையையும் இவ்வாறே அகரத்தில் நமசிவய, ஓம் நமோ நாராயண, சரவணபவ, ஆகிய ஐந்தெழுத்து, எட்டெழுத்து, ஆறெழுத்து, மந்திரங்கள் அடங்கியுள்ளமையையும் விளக்கியுள்ளார். பிரணவம் ஆகிய ஓம் என்பதன் வரிவடிவம் தமிழே. நாயக்கர் அவர்கள் பறவைகளின்கரு, விலங்குகளின்கரு, மக்கட்கரு, ஆகியவையும் விநாயகன்உரு, தென்முகப்பெருமான் உரு, கூத்தப்பெருமான்உரு ஆகியவையும் தமிழ் ஓகாரத்தை ஒத்திருத்தலைப்படங்கள்மூலம் விளக்கியுள்ளார். தமிழ் ஓகாரத்துடன் தேவநாகரி ஓகாரத்தை ஒப்பிட்டு அறிஞராயினர். தமிழ் எழுத்துருவின் பெருமையினை அறிவார்களாக. தேவநாரிகயில் இவ்வுண்மைப் பொருள்களின் கதி என்னுமோ ?

தேவநாகரி தமிழ் உருவை விழுங்கிய பிறகு தமிழ் நாட்டின் பல கோயில்களில் தமிழ் மன்னர்களால் பொறிக்கப்பட்டுள்ள அளவிடற்கரிதான வரலாற்றுச் சான்றுகள் எல்லாம் வருங்காலத் தமிழ் மக்களுக்குப் புதியதொரு மொழியாகத் தோற்றமளிக்குமன்ருே ? ஆகையின் இக்கல்லெழுத்துக்களையும் அழித்து அவற்றைத் தேவநாகரி உருவில் மாற்றவேண்டுமே !

உலகமொழிகளின் எழுத்துருவங்களில் எல்லாம் எளிமையும் அழகும் வாய்ந்தது தமிழ் எழுத்துரு ஒன்றே. இதன் உண்மையினைத் தமிழுக்கும் பிறமொழிகளுக்கும் பொதுவான ஒலி எழுத்துருவங்களை ஒப்பிட்டுக் கண்களால் பார்க்கினும் கையால் எழுதிப்பார்க்கினும் உணரலாம்.

'' எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு ''

சேக்கிழார்

பேராசிரியர் ச. பாலசுந்தரம்

சாந்தநாத சுவாமி வணக்கம்

சொல்லும் அறிவும் தொடரொண்ணுத்
துவாத சாந்தப் பெருவெளியில்
அல்லும் பகலும் நடமாடி
அருள்மா மழையைப் பெய்தெனது
கல்லென் மனத்தைக் கரைத்தமைதி
காட்டும் சாந்த நாதனடி
வெல்லுந் தமிழாற் போற்றியருள்
வேண்டி விழைவாற் பரவுதுமே.

சேக்கிழார் வணக்கம்

வாக்கினல் விளம்ப ஒண்ணு வளர்மதிக் கண்ணி யான்றன்
வாக்கினல் திருத்தொண் டர்தம் மாண்பினைப் பரம ஞான
நோக்கினல் அமிழ்தப் பாவால் நுவன்றுசெந் தமிழ்வாழ் வீந்த
சேக்கிழார் பாதப்போதென் சென்னிசேர்ந் தலர்க மன்னே

புலவர்கட்கு வணக்கம்

தெய்வச் சிறப்பைத் திருத்தொண்டால்
தெரியக் காட்டிச் சிவமான
சைவப் பெரியார் தகவெல்லாம்
தண்ணாந் தமிழால் ஆன்மாக்கள்
உய்வைப் பெறுமா றுரைத்ததவ
ஒளிசேர் குன்றை முனிவர்அருள்
மெய்வைத் திழைத்த மாக்கதையுள்
மேவும் பல்வே றுணர்வுகளைக்

5—8—73 இல் நிகழ்ந்த புதுக்கோட்டை சாந்தநாத சுவாமிகோயில் சேக்கிழார் விழாக் கவியரங்கத்தின் தலைமையுரை.

கன்னல் தமிழால் கவிபுனைந்து
கழறப் போந்திப் பாட்டரங்கில்
துன்னி யிருக்கும் பாவலர்க்கும்
சூழ்ந்து மன்றம் சிறப்பெய்த
மன்னியிருக்கும் அவையோர்க்கும்
வணக்கங் கூறிச் சிலபாக்கள்
பன்னி உரைக்க முயல்கின்றேன்
பரிவால் குற்றம் பொருத்தருள்க!

அவையடக்கம்

ஆக்கமருள் செந்தமிழின் ஆழங்காணு
அடியேனை இவ்வரங்கப் பொறுப்பைஏற்று
நோக்கமைந்த கவிவிருந்து படைக்கச்செய்தீர்
நூன்முறையாற் பயின்றறியாப் பாலன், தெய்வப்
பாக்களிலே பைந்தமிழர் மரபைச் சைவப்
பண்பாட்டை அருள்நெறியைக் கலைஞானத்தை
தேக்கிமடை உடைத்தொழுகும் பக்தி வெள்ளம்
திசைபரவச் செய்தஅருள் மொழித்தேவர்தம்

மலரடியைச் சிந்தித்துக் கவியரங்கை
மகிழ்ச்சியோடு தொடங்குகின்றேன் மங்கை பங்கன்
உலகமெலாம் என உரையைத் தொடங்கி நல்க
உண்மைநெறித் தொண்டின் ஒளி ஏற்றித் தெய்வப்
புலமையினல் புத்தமிழ்தக் கவினுர் பாக்கள்
பொலிகின்ற காவியத்தை புரட்சி ஓங்க
வலமுறச்செய் தொருபெரிய புராணமென்று
வழங்கியசீர் திருத்தொண்டர் மாக்கதைக்குள்

வாழ்கின்ற ஆறுபெரும் பொருளைத் தேர்ந்து
வளம்பெருகப் படைத்துணர்வு கனிந்து பொங்க
யாழ்முரலும் தண்டமிழாற் கவிதையாத்து
ஞாலமுய வழங்குதற்கிவ் வரங்கத்தேறி
ஊழ்முறையால் அமர்ந்துள்ளார் அறுவர் ஆருய்
ஓங்கு பெருங்காலம்போல் அரசாங்கம்போல்
தாழ்வகற்றும் ஆதாரத் தத்துவம்போல்
சாத்திரம் சண்முகனுர் படைவீட்டைப்போல்

(தொடரும்)